1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 25-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 46-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

கடந்த ஒருவாரமாக மழைபெய்து வந்து இவ்வாரம் மறுபடியும் வெளித்திருக்கிறது. வாடைக்காற்று வீசத் தொடங்கியிருக்கிறது. அதனால் பாய்க் கப்பல்கள் இந்தியாவிலிருந்து ஓடுகள் ஏற்றிவந்து கல்முனைக்கப்பாலுள்ள பெருங்கடலில் நங்கூரமிடத் தொடங்கியிருக்கின்றன. பனிபெய்துகொண்டு வருகிறது.

### அரிசியைப் பிரித்துவாங்கலாம்

கூப்பனுக்குக் கொடுபட்டுவரும் பங்கீட்டரிசியைப் பகுதிபகுதியாக வாங்கிக்கொள்ளும்படியான வசதியளிக்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதுவரை கூப்பன் அரிசியைப் பகுதி பகுதியாகப் பிரித்துவாங்க முடியாமலிருந்தது. அதனால், கூப்பனுக்குரிய அரிசியை முற்றாகஒரேமுறையில் வாங்கவேண்டியிருந்தது. ஆனால், இனிமேல் உணவுக்கட்டுப்பாட்டுக் காரியாலயங்களிலும் கூப்பனைக்கொடுத்தும் பெர்மிற் பெற்றுக்கொண்டால் கூப்பனுக்குரிய அரிசியைப் பகுதிபகுதியாகப் பிரித்து வாங்கிக்கொள்ளமுடியும்.

### றெயில்வே ஜெனறல் மனேஜர்

இலங்கை றெயில்வே ஜெனறல் மனேஜராய் இருந்து வருகிறவரான திரு. எம். கனகசபை அவர்கள் சமீபத்திலே தம்முடைய பதவியிலிருந்து இளைப்பாறவிருக்கின்றார். அதற்கான மனுவை அவர் சென்ற வெள்ளிக்கிழமை சமர்ப்பித்திருக்கிறார். இவர்முந்த முந்த றெயில்வேயிலே ஓர் "புக்கிங் கிளாக்" தவாகவிருந்து இந்த உயர் பதவிக்கு வரலாயினர். றெயில்வே ஜெனறல மனேஜர் பதவிவகித்த முதல் இலங்கையர் இவரே.

### பீர்த்திருடனும் விரல்அடையாளமும்

திரிகோணமலையிலே எஸ். மாசில்லாமணி எனுமொருவன் திரு. ஜே. எவ். மைக்கின்லே எண்பவரின் வீட்டிலிருந்து ஒன்பதுரூபா பெறுமதியான ஆறு பீர்பபோத்தல்களைத் திருடினனென அங்குள்ள நீதிஸ்தலத்திலே சென்ற வியாழக்கிழமை வழக்குத்தொடரப்பட்டான். இந்தத் திருட்டுவிஷயமாய் விசாரணைநடத்தச்சென்ற பொலிசர் அவ்வீட்டுவளவிலே விரல்அடையாளமுள்ள பீர்ப்போத்தல் ஒன்றைக் கண்டெடுத்து விரல்அடையாளப் பதிவு அதிகாரிக்கு அனுப்பிவைத்தனர். பின்பு ஐயுறவின்பேரிலே பொலிசர் மாசில்லாமணியைக் கைதுசெய்து அவனுடைய விரல்அடையாளத்தையும் பதிவு அதிகாரிக்கு அனுப்பிவைத்தனர். அங்கே பீர்ப்போத்தலில் இருந்த விரல் அடையாளமும், மாசில்லாமணியின் விரல்அடையாளமும் ஒரேமாதிரியாயிருக்கக் கண்டறியப் படலாயிற்று. வழக்கு விசாரணைமுடிவிலே மாசில்லாமணி திருட்டுக்குற்றவாளியாகி மூன்று மாதக் கடுமூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டான்.

### நெல்வேளாண்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணப்பகுதிக் கமத்தொழில் ஆலோசனைச்சபை நடத்தவிருக்கும் காலபோக–சிறுபோக நெல்வேளாண்மைப் போட்டிகள்பற்றிய விபரங்கள் வெளிவந்துள்ளன. இப்போட்டிகள் யாழ்ப்பாணம், வலிகாமம்கிழக்கு, வலிகாமம்மேற்கு, வலிகாமம் வடக்கு, வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, கரைச்சி, பூநகரி, நெடுந்தீவு, தீவுப்பகுதி ஆகியாம காரியாதிகாரிகளின் பிரிவுகளில நடைபெறவிருக்கின்றன. இப்போட்டிகளிலே வடமாகாணத்தில் சிறந்த வேளாண்மைச் செய்கைக்காரரெனத் தெரிவுசெய்யப் படுகிறவருக்கு 250ரூபா விசேஷபரிசாக வழங்கப்படும். இதுதவிர, 100 ரூபா, 75 ரூபா, 50 ரூபாப்பரிசுகளும் இருக்கின்றன.

### கற்றமாணவரும் கமத்தொழிலும்

பாராளுமன்றகமத்தொழில் ஆலோசனைக்கம்மிற்றி ஆக்கத் தீர்மானித்திருக்கும் ஓர்புதியதிட்டத்தின்கீழ், எஸ். எஸ். சி – ஜே. எஸ். சி பரீட்சைகளில் அரங்கேறிய மாணவர்கள் கமத்தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டுப் பின்னர் கமத்தொழில்செய்து பிழைப்பதற்கெனக் காணிகள் வழங்கப்படுவார்கள். கமத்தொழிற்கல்விசம்பந்தமாய் உணவு–கமத்தொழில் மந்திரியார் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் பேசியவிடத்து, ஒவ்வோர் மாகாணத்திலும் குறைந்தபட்சம் ஆண்பிள்ளைகளுக்கு ஒன்றும, பெண்பிள்ளைகளுக்கு ஒன்றுமாக ஒவ்வோர் பயிற்சிக் கமபாடசாலை இருந்துவருமென்றும், ஆண்பிள்ளைகளின் கமப்பயிற்சிப் பாடசாலைகளிலே அதிகம்சிறந்த ஆசிரியர்களை நியமனஞ்செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதென்றும் தெரிவித்திருக்கின்றார்.

### தமிழ்மொழிபற்றிய கவலை

"இன்றைய நிலைமையிலே தமிழ் மொழி அரசாங்கபாஷையாக வந்தாலுஞ்சரி, வராவிட்டாலுஞ்சரி தமிழ் மொழி அழிந்துவிடுமென்று நாம் கவலைப்பட வேண்டியதில்லை; கடந்த பல ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ்மொழி எப்படி வாழ்ந்துவந்ததோ, இனிமேலும் அப்படியே வாழ்ந்துவரும் என்பதில் ஐயமில்லை" என்று சென்றசனிக்கிழமை கொழும்புச் சஞ்சூசையப்பர் கல்லூரி மாணவர்களின் தமிழ் இலக்கியசங்க ஆண்டுவிழாவின் போது, உணவு – கமத்தொழில மந்திரிகாரியாலய நிரந்தர காரியதரிசியான திரு. கே. ஆழ்வாப்பிள்ளை அவர்கள் கூறலாயினர். மேலும் அவர்பேசியபோது, தமிழ்மக்கள் வீரத்துடனும், மானத்துடனும், மரியாதையுடனும் வாழ்ந்தமக்களென்றும், அவர்களது பண்பாட்டையும், கலாசாரத்தையும் இன்றுள்ளநாம் பாதுகாத்து வரவேண்டியது அவசியமென்றும் கூறிநின்றார்.

### சமயமும் அரசாங்கபாஷையும்

தம்பதேனியாவிலுள்ள காலிங்க விஜயபா ஞாயிறுவாரப் பாடசாலைப் பரிசளிப்புவிழா சென்ற வியாழக்கிழமை நடந்தேறியது. அதற்கு முன்னை நாள்பிரதமர் திரு. டட்லி சேனநாயக அவர்கள் தலைமைவகித்தார். அவ்விழாவின்போது, சமயமும், அரசாங்கபாஷையும் [illegible] இருக்கவேண்டிய

நிலைமையைத் தெளியப்பண்ணுமாறு புத்தபிக்குஒருவர் அவரைக் கேட்டுக்கொண்டார். அவர்மறுமொழியாக:— அரசாங்கபாஷைவிஷயமாய்ப பொதுசன அபிப்பிராயம் எதுவாயிருந்தபோதிலும அரசாங்கபாஷையாகச் சிங்களப்பாஷையை மாத்திரமே ஆக்குவதை நான் முற்றாக எதிர்க்கிறேன; சுதந்திரம்என்பது நாடுமுழுவதற்கு மேயல்லாது, அதில் ஒருபகுதிக்குமாத்திரம் வெற்றிகொள்ளப் படவில்லை; மறுசமயங்களையும், அவற்றின் ஸ்தாபனங்களையும் நசித்து அடக்குவதாலே தங்கள் சமயத்தைப்பரப்புமாறு ஆர்ப்பரித்து ஓலமிடுகின்ற புத்தசமயிகளில் ஒருபிரிவினரின் முயற்சிகள் துக்ககரமானவையாகும்; இத்தகையமுயற்சிகள் புத்தபோதனைகளுக்கு முரணானவையெனக் கூறிநின்றார்.

### உள்நாட்டுவிமானப் பிரயாணசேவை

கொழும்புக்கும், யாழ்ப்பாணத்துக்கும், திரிகோணமலைக்கு மிடையே எதிர்பார்க்கப்படும் எயர்சிலோன் உள்நாட்டு ஆகாயப்பிரயாணசேவை வருகிற மார்கழிமாதம் ஆரம்பமாகும் போல் இருக்கிறது. இதற்கென இலங்கை விமானக் கழகத்திலிருந்து இரண்டு "ட்றுகன்-றபிடே" விமானங்களை விலைக்கு வாங்குவதற்கான ஆயத்தம் நடக்கின்றது.

### விசர்நாய்க் கலவரம்

கழுத்துறைக்குச் சமீபமான ஹீனெற்றியகலை எனுங் கிராமத்திலே சென்ற வெள்ளிக்கிழமை விசர்கண்ட நாய்ஒன்று பைத்தியாவேசங்கொண்டு பதினேழுபேரையும், மற்றும்அநேக மிருகங்களையும்கடித்து மணிக்கணக்காக அக்கிராம முழுவதையுமே ஓர் கலக்குக்கலக்கி எவருமே வீட்டைவிட்டு வெளியேறாமல பண்ணியது. கடைசியாக அக்கிராமவாசிகளில் ஒருவன துணிகரமாக வெளிகொண்டு கழுத்துறைப்பட்டினஞ்சென்று பொலிசரின் உதவியை நாடினன். அவர்கள் துப்பாக்கியுடன்சென்று விசர்நாயைச் சுட்டுக்கொன்றனர்.

### விதைவெங்காயத் தட்டுப்பாடு

தற்போது விதை வெங்காயத்தின் விலை இருமடங்காக அதிகரித்திருக்கிறது. அதாவது அந்தர் 50 ரூபாவாக விலைப்படுகிறது. தற்போதைய போக விதைப்புக்குப் போதிய வெங்காயம் இல்லையென்று முறையீடுசெய்யப்படுகிறது. முந்தியவருடங்களிற்போன்று இந்தவருடமும் விதை வெங்காயம் இறக்குமதி செய்யக்கூடிய வசதிகள் வடஇலங்கைக் கமஉற்பத்திச் சங்கத்துக்கு இல்லையாம்.

### புதிய பாத்திமாமாதா கோவில்

கண்டியிலிருந்து தெல்தெனியாவுக்குச் செல்லும் வழியிலே படிவத்தை எனுமிடத்தில் புதிதாகக் கட்டப்பட்டிருக்கும் பரிசுத்த பாத்திமா மாதாகோவில் வருகிற 4-12-54 சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்குக் கண்டிமேற்றிராணியாராகிய மகாவந். பேர்ணட் றெஞ்ஞோ ஆண்டவரால் மந்திரிக்கப் படவிருக்கிறது. 4 மணிக்குப் பாத்திமா மாதாவின் திருச்சுரூபம் கண்டிநகர் ஆசனக்கோவிலிலிருந்து பட்டிவத்தைக்குப் பவனியாக எடுத்துச் செல்லப்படும். அதன்மேல் வெஸ்பர்ஸ் [illegible]மெனவும், மறுநாள் 5-ந் திகதி காலை பலதனிப்பூசைகள், பெரிய பாடற்பூசை, சுற்றுப்பிரகாரம், அன்னதானம ஆகியவற்றுடன் விழாநிறைவாகுமெனவும் அறிகின்றோம்.

### பாத்திமா கேடயமும் பாத்திமா கிண்ணமும்

திரு. சி. எஸ் நாயகம்அவர்கள் சங்மானித்த பாத்திமாமாதா கேடயத்தையும், பாத்திமாமாதா கிண்ணத்தையும் வெற்றிகொள்ளுமாறு யாழ்ப்பாண மேற்றிராசனத்திலுள்ள ஆறு கத்தோலிக்ககல்லூரிகளுக்குமிடையே நடந்துவந்த உதைபந்தாட்டப் போட்டியின் கடைசியான ஆட்டங்கள் சென்ற 20-ந் திகதிசனிக்கிழமை யாழ்ப்பாண முற்றவெளியிலே பொலிஸ்மைதானத்தில் பரிமளிப்பாக நடந்தேறின. முந்தச்சம் பத்திரிசியார் கல்லூரியின் இரண்டாவதுபிரிவுக் கோஷ்டிக்கும், செண் என்றீஸ் கல்லூரியின் இரண்டாவதுபிரிவுக் கோஷ்டிக்குமிடையே நடைபேற்ற ஆட்டத்தில் என்றீஸ்கலலூரிக்கோஷ்டி 4-0 கோல்களால் பத்திரிசியார்கல்லூரிக்கோஷ்டியைத் தோற்கடித்தது. பின்னர் பத்திரிசியார் கல்லூரியின் முதலாவதுபிரிவான கோஷ்டிக்கும், என்றீஸ்கல்லூரியின் முதலாவது பிரிவான் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற ஆட்டத்தில பத்திரிசியார் கல்லூரிக் கோஷ்டி 3-1 கோல்களால் என்றீஸ் கல்லூரியைத் தோற்கடித்தது. அதன் மேல் இருகல்லூரிகளையுஞ் சேர்ந்த மாணவர்கள் தத்தம் கோஷ்டியினருடன் பத்திரிசியார்கல்லூரிக்குப் பவனியாகச்சென்றதும் அங்கு மகாவந். ஜே. ஏ. கியோமார் ஆண்டவர்தலைமையில் இருகல்லூரிகளினதும் தலைவர்களும், ஆசிரியர்களும் சமுகமாகக் கேடய, கிண்ணப் பரிசளிப்புவிழா சிறப்பாக நடந்தேறியது. பாத்திமாகேடயம் சம்பத்திரிசியார் கல்லூரிக்கும், பாத்திமாகிண்ணம் செண் என்றீஸ்கல்லூரிக்கும் ஆண்டவர்அவர்களால் வழங்கப்படலாயின. அவ்வேளை இருகல்லூரிகளினதும் தலைவர்களும், ஆண்டவர்அவர்களும் ஆற்றியசொற்பொழிவுகளிலே வெற்றிபெற்ற கோஷ்டிக்குப் புகழ்மாலை சூட்டினார்கள். ஈற்றில் ஆண்டவர் அவர்களுக்கும், கேடயத்தையும், கிண்ணத்தையும் சங்மானித்தவரான திரு. சி. எஸ். நாயகம்அவர்களுக்கும் மும்மடிச்சோபனங் கூறப்பெற்று விழாநிறைவெய்திற்று.

### லண்டன் பி. ஏ. பரீட்சை

1954-ம் ஆண்டுக்கான லண்டன் சர்வகலாசாலை பி. ஏ. பரீட்சையிலே சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியரான திரு. ஜே. எஸ். எஸ். பி. அமிர்தநாயகம்பிள்ளை (முதலாம் பிரிவு) அவர்களும், வண. எச். ஜே. மரியாம்பிள்ளை சுவாமி (இரண்டாம் பிரிவு) அவர்களும், சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியரான திரு. பி. லோறென்ஸ் (மூன்றும் பிரிவு) அவர்களும், ஆசிரியர் ஜே. எவ். சிக்மறிங்கம் (இரண்டாம் பிரிவு) அவர்களும் அரங்கேறியிருக்கிறார்களென அறிந்து சந்தோஷமானோம்.

---

† வீட்டுப் பணியாளரின் பாதுகாவலர்கள் யார்?

அர்ச். மார்த்தம்மாள் (திருநாள்–ஆடி 29), அர்ச். சிற்றா (சித்திரை 27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்தான் குற்றவாளி

— M. J. M. —

(புதிய அர்ச்சியசிஷ்டர்களுள் ஒருவரைப்பற்றிய சம்பவம்)

"கஸ்பார், என்னுளே குழம்புகிறநேரம்பார்த்துத்தான் நீ வருகிறாய்" என்றார், தகப்பனான அந்தோனியோ டெல் பவலோ. இவர் அரசமாளிகையின் தலைமைச்சுயம்பாகி. அன்று இவர் சமையற்கட்டில் நின்றவர்களின் இரைச்சலுக்குமேலாகச் சத்தம்போடவேண்டியிருந்தது. "இன்று நமது பிரபு பரிசுத்தபிதாவுக்கு விருந்து கொடுக்கிறார் அல்லவா?"

பையன் அங்குநின்றசமையற்காரார், றொட்டிக்காரர், பணியாளர்சேனையைக் கவனித்தான். எல்லோரும் ஏகநேரத்தில் பேசிக்கொண்டு சமையற்சாலையில் ஒரேதடல்புடலாய் நின்றார்கள்.

"அப்பா! நீங்கள் தயாரிக்கும் விருந்து எப்போதும் சிறப்பாயிருக்கும்; பரிசுத்தபிதாவுக்கு மிகமகிழ்ச்சியாயிருக்கும்...; ஏழைகளுக்குக்கொடுக்க ஏதேனும் மிச்சமான சாப்பாடு இல்லையா அப்பா?" என்றான் கஸ்பார்.

தகப்பனுடையமுகம் மலர்ந்தது. "உண்டுமகனே, உண்டு. அவைகள் சற்றேபழுதாகிவிட்டனவென்று கோபியாதே."

சிறுவன் சிரித்தான். "கோபத்தையடக்க உதவிபுரிய வேண்டுமென்று எப்போதும் அர்ச். பிரான்சீஸ் சவேரியாரை மன்றாடிவருகிறேன். ஆனால், என்னுடைய கோபக்குணம் போகாதாம். ஏன் அப்பா?"

அந்தோனியோவுக்குச் சிரிப்புவந்தது. "நீ என்னைப்போலத் தானடா கண்ணே. அமைதியான உன் அம்மாவைப்போல் அல்ல; நீ சுவாமியாய்ப் போக வேண்டுமென்கிறாய். அப்படியானால் உன்கோபக்குணத்தை அடக்க வேண்டும்."

மிகுந்திருந்தஉணவுகளை ஓர்பெட்டியில்போட்டான் கஸ்பார். அப்போது இரண்டாவது சமையற்காரன் அவனுக்கென்று ஓர் வெள்ளைக்கேக் கொடுத்தான்.

இது 1800-ம் வருடம் முதுவேனிற்காலம். கஸ்பார் செல்லும்வழியிலே அர்ச். சவேரியாரின்வலதுகரம்பாதுகாக்கப்படும் யேசுஎன்னும் தேவாலயத்துள் சென்று சிறிதுநேரம்செபஞ்செய்தான். கஸ்பார்குழந்தையாயிருக்கும்பொழுது அங்கே ஒருஅற்புதம் நிகழ்ந்தது.

பிறந்தகுழந்தை குருடனாகவேயிருப்பான்என்று வைத்தியர் கூறிவிட்டார். கண்ணிற்கு ஒன்றுமே செய்ய முடியாது. அவனுடையதாய் தன் குழந்தையை அக்கோவிலுக்குக் கொண்டுபோனாள். அர்ச். சவேரியாரின் திருப்பண்டம் அக்குழந்தையின் கண்களில் வைக்கப்பட்டதும், ஓர் அற்புதம் நிகழ்ந்தது. உடனே கண்வருத்தம் நீங்கினது....

கோவிலுக்குச்சென்றவன் சிறிது நேரஞ் செபித்துவிட்டு வெளியேவந்தான். வறியவர்கள்பலர் அங்குநின்றனர். ஒருவன் மெலிந்த கிழவன். வேறுஅநேக ஏழைகளும் நின்றனர். அவன் கொண்டுபோன பெட்டியிலிருந்த பலகாரமெல்லாம் முடிந்து அந்தச்சின்ன வெள்ளைக் கேக்மட்டும் மிகுதியாயிருந்தது.

"இது எனக்கு" என்று எடுக்கும்பொழுது கந்தைதரித்த ஒருகுருட்டுச் சிறுவனைக்கண்டான்.

"ஐயா, பசிக்குது" என்றான் அந்தக் குருட்டுச்சிறுவன்.

"ஒருசின்னக் கேக்தான் மிச்சம்" என்றான்கஸ்பார். "இந்தா அதுஉனக்கு" என்றுசொல்லி அதை அவன் கையில் வைத்தான்,

"மெத்தப்பெரிய உபகாரம் ராசா; நீர் சின்ன ஆளாயிருக்கே; நீர்யார்?"

"நான் கஸ்பார் டெல் பவலோ. எனக்குப் பதினான்குவயது. அரசமாளிகையில் வேலைசெய்கிறேன்."

அன்றிரவு தன்தகப்பன் விருந்து பரிமாறுவதைப் பார்க்கச்சென்றான் கஸ்பார். தானும் பரிமாற உத்தரவுகேட்டான். அந்தோனியோ நன்றாகச் சிரித்துவிட்டு: "ஆமாம், அதற்கென்ன! பரிசுத்த பிதாவைமாத்திரம் முழிந்துபார்த்துக்கொண்டு நில்லாதே."

விருந்துவேளை 7-ம் பத்திநாதபாப்பானவர் பிரபுவுக்கருகில் அமர்ந்திருந்தார். களைதோய்ந்த அவர் முகத்தில் சிறுபுன்னகை அரும்பியது.

விருந்துமுடியும்வேளை பிரபுஎழுந்து, "இப்பொழுது விசித்திரவிளையாட்டு ஒன்று; உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒருகேக் கிடைக்கும்; அவைகளுள் ஒன்றில் இரத்தினக்கல்பதித்த மோதிரம்ஒன்று ஒளித்துவைத்திருக்கிறேன்; யார் கண்டுபிடிப்பாரோ அவருக்கே அதுசொந்தம்."

அன்று இரண்டாவது சமையற்காரன் தனக்குக்கொடுத்ததைப் போலவே அந்தச்சின்னக்கேக்குகள் இருப்பதைக் கஸ்பார் கவனித்தான். யாருக்கு மோதிரங்கிடைக்குமென்று கவனித்துப்பார்த்தான். சிலநிமிஷங்கள்சென்றன. கேக்குகளையெல்லாம் பிய்த்தும் ஒன்றிலும் மோதிரம் அகப்படவில்லை. பிரபுவுக்கு வெட்கமும், ஆத்திரமுமாய் வந்தது. நடந்ததுஎன்ன?

கஸ்பாரின் மனதில் கோடையிடிவிழுந்தாற்போல் இருந்தது. குருட்டுப்பையனுக்குக் கொடுத்த கேக்கில்தான் மோதிரம் இருக்கக்கூடுமோ? கஸ்பாருக்கு இன்னதுசெய்வதென்று புரியவில்லை. அப்பொழுது தகப்பன் தன்னையழைக்கும் சைக்கினையைக் கவனித்தான் கஸ்பார்.

அப்போது "பின்வாசலில் ஒருகிழவியும், ஒரு குருட்டுப்பையனும நின்றார்கள்; கைதடுமாறிக் கேக்கில் மோதிரம்ஒன்று கொடுத்தாயாம்; ஓடடா, எனக்குநாசகாலம் கிட்டுமுன்" என்றார் தகப்பன் கஸ்பாரைநோக்கி.

கஸ்பார் பின்வாசலுக்கு ஓடினான். அவன்வரும் சத்தத்தைக்கேட்டகுருட்டுச்சிறுவன், "ஐயா! இந்தாங்க உங்க மோதிரம்."

"இது என்னுடையதல்ல; உன்னை அதன் சொந்தக்காரரிடம் கொண்டு போய்விடுகிறேன் வா."

கந்தைதரித்த ஒருஏழைச்சிறுவனைக் கஸ்பார் அழைத்துவருவதைக்கண்ட விருந்தாடிகள் கலவரப்பட்டார்கள்.

"ஐயா பிரபு; உங்கள்மோதிரத்தை இவன்கண்டுபிடித்து அதைஉங்களிடம் கொடுக்கவருகிறான்" என்றான்கஸ்பார்.

பிரபுவுக்கு ஓரேதிகைப்பு. "இது எப்படிவந்தது?" "நான்தான் குற்றவாளி, நடந்தது இதுதான்" என்று நடந்தவற்றை விபரமாய்க் கூறினான் கஸ்பார்.

கஸ்பார் சொன்னதைக்கேட்டபின் பரிசுத்தபிதா பிரபுவைநோக்கிச் சொல்வார்: இதுவே மிகவும் விசித்திரமாயிற்றே; குருட்டுப்பையன் நேர்மைக்கும, கஸ்பார் பேரன்பிற்கும் மாதிரியாய் விளங்குகிறார்கள் அன்றோ! சுயநலத்தையேதேடும் இவ்வுலகில் இந்த உத்தம மாதிரியைக்காண்பது எவ்வளவு ஆனந்தம்!"

"உண்மையென்று நானும் ஒப்புக்கொள்ளுகிறேன் பிதாவே; மோதிரத்தை என்னசெய்வது?"

பரிசுத்தபிதா சிரித்துக்கொண்டு "குருட்டுப்பையனுக்கே கொடுத்து விடுங்கள்" என்றார். விருந்தாடிகள் எழுந்து கரகோஷஞ்செய்தார்கள். பரிசுத்தபிதா கஸ்பாரைக்கூப்பிட்டு: "மகனே, நீர்ஒருகாலம் குருட்டு ஆத்துமங்களைச் சருவேசுரனிடம் கொண்டு வந்துவிடுவீர்" என்றார்.

பலவருடங்களின்பின் கஸ்பார் குருப்பட்டம் பெற்றார். சருவேசுரனிடம் ஆத்துமாக்களைக் கொண்டுவந்து சேர்ப்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# விசுவாசம் இரட்சணியத்தின் சுவாசம்

[ சி. எஸ். நாயகம், ஸ்றேஷன்மாஸ்றர், கெம்பாஸ், மலாயா ]

நாம்விடும் சுவாசம் — அதாவது மூச்சு நமதுஉடம்புக்கு மிக இன்றியமையாதது. நாம் பலநாள் அன்ன ஆகாரமின்றிப் பட்டினிகிடக்கலாம். ஒறுத்தல் உபவாசமிருக்கலாம். ஆனால், நாம் மூச்சுவிடாவிடில், அப்படியே உயிர் அடங்கிப் போகவேண்டியதுதான். எதைத்தான் மறுத்தாலும் இதைநாம் ஒருபோதும் மறுக்கமுடியாது. ஆகவே, நாம்உயிர்வாழ்வதற்குச் சுவாசம் மிகஅவசியம். அஃது இன்றேல் மரணம்நிச்சயம். மரணம் என்பது நமக்கு நித்தியபாக்கிய வாழ்வை, அன்றேல் நித்தியநிர்ப்பாக்கியவாழ்வைத் தருவதாகும். இந்த ஒற்றைஇரட்டை பிடிக்கும்வாழ்வைத் தின்மைக்கோ, நன்மைக்கோ தீர்த்து வைப்பது உலகில் நமதுதினுந்தசீவியத்தைப் பொறுத்ததாகும். எவ்விதம் நாம் சீவிக்கிறோமோ, அவ்விதமே நமது சீவியத்தின் முடிவுமிருக்கும். மரம் எந்தப்பக்கம் சாய்ந்துநிற்கிறதோ அந்தப்பக்கமே தப்பாமல்விழும். நமதுசீவியவிருட்சம் நல்லபக்கம்சாய்ந்திருந்தால் நமதுமுடிவும் பாக்கியமாய் இருக்கும். தீயபக்கம் சாய்ந்திருந்தால் நமதுமுடிவும் நிர்ப்பாக்கியமாயிருக்கும். ஆகவே, நமதுசீவியம் எப்படியோ, மரணமும் அப்படியே இருக்குமென்பது நிச்சயம்.

மரணம்என்றால் என்ன? உலகவாழ்வுக்கு இடப்படும் முற்றுப்புள்ளியே. அதாவது, உலகசீவியத்தை முடித்து மறுமைச்சீவியத்தில் பிரவேசிப்பதே. அதாவது, நமது பூதஉடலைவிட்டு — சரீரத்தைவிட்டு ஆத்துமம் பிரிந்து போவதே. எனவே, நமதுசரீரத்துள் ஒருஆத்துமம்உண்டு. அதிலே இந்த ஆத்துமம் இருக்கும்வரையிலே — சரீரமும் ஆத்துமமும் ஒன்றாயிருந்து உயிர்வாழ்கிறவரையிலே நாம் ஒவ்வொருவரும் இந்தஉலகில் உயிர்வாழ்வோம். என்றைக்குஆத்துமம் சரீரமாகியகூட்டுக்குப் பிரியாவிடைகூறிக்கொண்டு புறப்பட்டுப்போகிறதோ, அன்றைக்குச்சரீரம் பிரேதம் — சவம் — பிணம்என்று பெயர்சூட வேண்டியதே. அதைக்கட்டிலிற் தூக்கி வளர்த்தி ஒப்புச்சொல்லிஅழுது துக்கப்பறை முழக்கவேண்டியதே. பின்னர் அதற்குக்குளிப்பாட்டி, பாவைக்குப் போன்று அழகாக உடுப்பாட்டி, கடைசியாக ஊர்வலமாக மயானத்துக்குக்கொண்டுசென்றுபெருமூச்சு, நெடுமூச்செறிந்து பிரலாபமததியில் பூமிதானஞ்செய்து திரும்பவேண்டியதே. அத்தோடு இறந்தவருக்குப் பூலோகம் முடிவடைந்துவிட்டது. ஆயினும் சில காலம் அவரைநினைப்போம், நினைத்துச் சலிப்போம். பின்னர் தேய்பிறை போன்று மையமெல்லப் படிப்படியாக அவரைப்பற்றியஞாபகமே குறைந்து இல்லாதொழிந்துபோகும். இதுதான் உலகவாழ்வு! இதுதான் மனிதவாழ்வு!

இன்னும் மரணமென்றால் என்ன? சிறைக்கூண்டாகிய ஒருவரது தேகக்கூண்டிலே பட்சியைப்போல் அடைபட்டுக்கிடந்த அவரதுஆத்துமம் அக்கூண்டைவிட்டுப் பறந்துபோவதே. எனவே, நமதுசரீரத்தைப் பிழைக்க வைப்பது ஆத்துமமே. ஆனால், நமது ஆத்துமத்துக்கும் ஓர் உயிருண்டு. அதற்கும் உயிர்கொடுக்கும் சுவாசம் உண்டு. அதுதான் "விசுவாசம்" என்பது. இந்த விசுவாசமென்னும் ஞானச்சுவாசம் நமது ஆத்துமத்தில் இல்லையோ, அந்தஆத்துமம் ஞான உயிரற்றஓர்பிணமாகும். அப்போது அது நித்தியபரலோக பேரின்பவாழ்வுக்குச் செத்து, நித்தியநரகவாழ்வுக்குச் சீவிக்கிறது. என்றைக்கு அந்தஆத்துமம் தனதுஉடலைவிட்டுப் பிரிகிறதோ, அன்றைக்கே அது நித்தியநரகசீவியத்துள் பிரவேசிக்கிறது. அதிலிருந்து இனிமேல்அது மீள அறியாது. இல்லை, இல்லை, மீளமுடியாது. எந்தஆத்துமம் விசுவாசமாகிய ஞானஉயிரைக் கொண்டதாய்ச் சுவாசித்துச் சீவித்திருந்து என்றைக்குத் தனதுஉடலைவிட்டுப் பிரிகிறதோ, அன்றைக்கே அதுதனது நித்திய பேரின்பகதியாகிய மோட்சவாழ்வுக்குப் பறந்துசெல்லுகின்றது. ஆகவே, நமதுஉடலுக்கு ஆத்துமம் உயிர்கொடுப்பதுபோல், நமதுஆத்துமத்துக்கு விசுவாசம் உயிர்கொடுக்கிறது. நாமசுவாசிப்பதற்கும், உயிர்வாழ்வதற்கும் ஆகாயம்—காற்று எவ்வளவுஇன்றியமையாததோ, அதே போலவே நமதுஆத்துமமும் ஞான உயிர்பெற்றுச் சுவாசிப்பதற்கும், உயிர்வாழ்வதற்கும் விசுவாசம் என்னும் ஆகாயம் — காற்று மிக இன்றியமையாததாகும்.

இதுவரை விசுவாசமே நமதுஞான உயிர்.—நமதுஇரட்சணியத்தின் உயிர்நாடி—ஆத்துமத்தின்சுவாசம்—மூச்சு என்றோம். அடுத்தபடியாக விசுவாசமாவது என்ன? என்பதை ஆராய்வோம். "விசுவாச"மென்பது நமது கண்ணுக்குத்தோற்றாத—புலப்படாத ஒருவஸ்துவை "உண்மை" அதாவது, "உள்ளது" என்று மனப்பூர்வமாய் ஏற்று நம்புவதிலேயே அடங்கும். உதாரணமாக, நம்மைச்சூழவரக் காற்றுவீசுவதை உணருகிறோம். அது எவ்விதம் உற்பத்தியாகிறது, எங்கிருந்துவருகிறது, எங்குபோகிறதுஎன்பது நமக்குத்தெரியாது. உள்ளபடி அதைநாம்கண்ணால்காணவில்லை. நமது கண்ணுக்கும் அது புலப்படுவதில்லை. அதன்நிறமும், கனமும், வடிவமும் நமக்குத்தெரியாது. நமக்குத்தெரிந்தது காற்றுவீசுவதை உணர்வதே. இந்த உணர்ச்சியைக்கொண்டு—காற்றினால்அசைந்தாடும் மரம், இலை, குழைகளைக்கொண்டு, நாம்விடும் சுவாசத்தைக்கொண்டு "காற்று"என்னும் ஒரு வஸ்து உண்டென்னும் உண்மையை விசுவசிக்கிறோம்.

இன்னும் தேவநியமனப்படி எங்கள் பெற்றோர் எங்களை உருவாக்குகையில் அவர்களை எங்களுக்குத் தெரியாது. ஆனால், நாங்கள் உலகத்தில்பிறந்தபின் படிப்படியாக இரத்தசம்பந்தமான இயற்கையின் உதவியைக்கொண்டும், புத்திவிபரத்தின் உதவியைக் கொண்டும், பெற்றோர்மூலமாகவும், மற்றோர்மூலமாகவும் "இவர்தான் உனதுபிதா" — "இவதான் உனது மாதா"என்று சொல்வதைக்கேட்டும், அவர்கள் மிக்கான அன்புடன் நம்மைப் பேணிக்காத்துச் சீராட்டியும், தாலாட்டியும், அமுதூட்டியும் வளர்ப்பதைக்கொண்டும் அவர்கள்தான் நமது "பிதாவும் மாதாவும்" என்று பூரண விசுவாசத்தோடு அவர்களைச் சங்கிக்கிறோம். மேலும் தூரத்தில்எழும்பும் புகையைக்கண்டதே அங்கே கட்டாயம் நெருப்புஉண்டென்று நம்பி விசுவசிக்கிறோம். ஆனால், அங்கிருக்கும் நெருப்பை நாம்கண்ணால் கண்டதில்லை. என்றாலும் அங்கே அது "உண்டு"— "இருக்கிறது" என்னும் உண்மையை ஏற்று விசுவசிக்கிறோம். இந்தஉதாரணங்களைக்கொண்டு இனி நாங்கள் எங்கள்சிந்தையை ஞானகாரியங்களில் திருப்புவோம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்



## லூர்துபதியைத் தரிசித்தபோது

பிறப்புமுதல் ஊமையும், செவிடுமான பதினுன்குவயதுடைய பெலாஜியே சுவெனும் என்ற ஓர் ஆபிரிக்க பெண்பிள்ளை சமீபத்திலே லூர்துபதி சென்று திருக்கெபியைத் தரிசித்தமறுநாளே கேள்விப்புலனும், பேசும்வரமும் பெற்றுக் குணமடைந்திருக்கின்றாள். இவள் தந்தை மரியாயின் புனித வருட திருயாத்திரையாய் டகோமென் எனுமிடத்திலிருந்து இவளுடன் வந்திருந்தார். அவர் தனதுமகள் குணமடையும்படியாகத திருக்கெபியிலே ஒருஇரவைச் செபத்திலசெலவிட்டார்.

## ஐந்தாவது கருதினல்

1946-ம் ஆண்டு மாசிமாதம் பேராகநடந்தேறிய கருதினல்மார் திருச்சங்கத்திலே லண்டன் நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் கிறிவ்வின் ஆண்டவருடனும், மற்றும்முப்பது குருசிரேஷ்டர்களுடனும கருதினல பதவி அளிக்கப்பெற்றவரும், ஆலோசனைத்திருச்சங்க அதிபருமான கருதினல் கியுசெப்பி புறானே ஆண்டவர் இம்மாதம் 10-ந் திகதியன்று தமது 74-ம் வயதிலே காலஞ்செலலலாயினர். இவர் இந்தவருடத்தில் காலஞ்சென்ற ஐந்தாவதுகருதினலாவர். தமது குருத்துவ வாழ்க்கை முழுவதையும் இவர் ரோமாபுரியிலேயே செலவிட்டிருக்கின்றார். கனன் சட்டத்திலே திருச்சபையில் மகாப்பெரிய நிபுணர்களில்ஒருவரான இவர் மேற்றிராணிமாரை நியமனஞ்செய்வதிலும், மேற்றிராசனங்களை அமைப்பதிலும், மேற்றிராசனங்களின் நிர்வாகத்திலும் ஆலோசனைகூறும் திருச்சங்கத்திலும் ஓர்அங்கத்தவராய் இருந்துவந்தார்.

## மிலான்நகர் அதிமேற்றிராணியார்

சாதாரணதிருச்சபையின் நிர்வாகத்திலே பரிசுத்தபிதாவின் பிரதமதுணைவராய் இருந்துவந்த அவரதுகாரியதரிசியான மொன்சிஞ்ஞோர் ஜியோவான்னி மொன்தினி சுவாமியவர்கள் காலஞ்சென்ற கருதினல் சூஸ்தர்ஆண்டவரிடமாக மிலான்நகர் அதிமேற்றிராணியாராக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். மிலான் நகர் அதிமேற்றிராணிமார் வழமையிலே எப்போதுமே கருதினல்மாராய் இருந்துவந்தனர். அதனல்இவரும் தமக்குமுன் இருந்தவரைப்போலவே மேற்றிராணித்துவ அபிஷேகத்தின்முன்னரே கருதினலாகும் நிலைமையில் இருக்கின்றார். பதினேராம் பத்திநாத பாப்பானவர் திருச்சபைத்தலைவராகத் தெரியப்படுமுன் மிலான்நகரின் கருதினல் அதிமேற்றிராணியாராக விருந்தார். 57 வயதுடையவரான மொன்தினி சுவாமியார் பரிசுத்தபாப்பரசரைப் போலவே நெட்டையானவர். சென்றவருடம் இவர் கருதினல்பதவிக்குத் தெரியப்பெற்றபோது அத்துணைபெருமபதவியை இவர் விரும்பாததால், இவரும், இவரது உடன்காரியதரிசியும் கருதினல்பதவிக்கடுத்த கௌரவபதவிகள் அருளப்பெற்றார்கள்.

## மாதாசூடிய மணிமுடி

பரிசுத்தபாப்பரசர் "ரோமைமக்களின் பாதுகாவல்" எனப் பெயர்விளங்கும் புராதனப் பெருமைவாய்ந்த சித்திரத்திலுள்ள தேவமாதாவினுடையவும், திருக்குழந்தை யேசுவினுடையவும் திருசசாயல்களுக்குச் சமீபத்தில்சூட்டிய பெரிதும் சிறிதுமான தஙகமுடிகளில் விலைபெற்ற அநேக வைரரத்தினக்கற்களும், நீலரத்தினக் கற்களும பதிக்கப்பட்டுள்ளன. மாதாவின்சாயலுக்குச் சூட்டிய மிகப்பெரிய மணிமுடியின்மத்தியிலே ஓர்மேற்றிராணித்துவ கணையாழிக்கெனப் பிரான்ஸ் தேச 13-ம் லூயிஸ்அரசரால் திருச்சபைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட பெரியதோர் கனகபுஷ்பராக இரத்தினக்கல் பதிக்கப்பட்டுள்ளது. தமது கணையாழியிலே இந்தஇரத்தினக்கல்லைக் கொண்டிருந்த கடைசியான மேற்றிராணியார் சிலதினங்களின்முன் காலஞ்சென்ற சாட்றெஸ்நகர் மேற்றிராணியாரான ஹாஸ்குரோனெற்ஆண்டவரே. இந்தமுடியின் கீழ்ப்புறத்திலே "மரியாயின்வருடமாகிய 1954-ம் ஆண்டு கார்த்திகை 1-ந்திகதி சருவேசுரனின் அரசியான மாதாவுக்கு, 12-ம் பத்திநாதர்" எனுஞ்சொற்கள் இலத்தீனிலே கொத்துவேலைசெய்து பொறிக்கப்பட்டிருக்கின்றன. இந்தஅழகான இருமுடிகளும் பாப்பரசின் இரத்தின பரிசோதகரான புரொபெசர் மிஸ்றுஸ்ஸி அவர்களால் நிர்மாணிக்கப்பெற்று, ரோமைநகர பொற்கொல்லர்ஒருவரால் செய்யப்படலாயின.

## மனந்திரும்பிய சீனப்பிரமுகர்

பரிசுத்த ஸ்தானத்தினிடமாய் இருந்துவருகின்ற தேசிய சீனஸ்தானீகர் காரியாலயத்தின் கருமாதிகாரியாகத் தற்போது பதவிவகித்திருப்பவரான டக்றர் ரிச்சோயின் அவர்கள் மனந்திரும்பிச் சிலதினங்களின்முன் ரோமாபுரியிலுள்ள மரியாயின் பிரான்சிஸ்கன் மிஷனரிமார்களது சிற்றாலயத்திலே சீனஸ்தானீகர் காரியாலயத்தின் திருச்சபை ஆலோசகரான வண. லோக்குவாங் சுவாமியாரால் ஞானஸ்நானம் அருளப்பெற்றிருக்கின்றார். அவ்வேளை பரிசுத்தபாப்பரசர் அவருக்குத் தமதுஆசீர்வாதம் அனுப்பிவைத்தார். விசுவாசப் பரப்புதற்சபைத் திருச்சங்கதலைவரான கருதினல் புமாசோனி - பயொந்[illegible] வர் [illegible] வாழ்த்[illegible] பினுத்தார்.

## மாதாவின் அற்புத படம்

கி. பி. 590-ம் ஆண்டு ரோமை நகரிலே பயஙகரமான ஓர் கொள்ளைநோய்பரக்கலாயிற்று. அந்நோய்கண்டு இறந்த அநேகீயிரவருள் இரண்டாவது பெலாஜியுஸ்பாப்பானவரும் ஒருவர். அவரைத்தொடர்ந்து திருச்சபைத்தலைவராய்வந்த அர்ச். பெரிய கிறகோரியார் எனும் பாப்பானவர் ரோமை மக்களாலே நெடுங்காலமாய் வெகுவாகப்பூசித்து வணங்கப் பெற்றுவந்த தேவமாதாவின் படம்ஒன்றைத் தாமே ஆசாரத்துடன் கரத்தேந்தியவராய் மாபெரும் பக்தர்குழாம் பின்தொடர, அர்ச். மேரிமேஜர் மகாலயத்திலிருந்து பச்சாத்தாப தபசுசுற்றுப்பிரகாரமாய் அர்ச். பேதுருவானவர் மகாலயங் கொண்டுசென்றார். இந்தப்பூசிதபடம் சுற்றுப்பிரகாரமாய்த் தைபர்நதிக்கரைக்கப்பாலுள்ள அதிரியான்சமாதியைக் கடந்துசெல்லும்போது, அந்தப்பாரிய ஞாபகசின்னத்தின்மேல் ஓர்சம்மனசானவர் தமதுவாளை உறையிலிட்டுக் காட்சியளித்தார். இது கொள்ளைநோய் நின்றுவிடுமென்பதற்குப் பரலோகத்திலிருந்து அருளப்பட்ட அறிகுறியாகுமெனக் கொள்ளப்பட்டது. அவ்வாறே அதுவும்நின்றுவிட்டது. இந்தக்காட்சியை முன்னிட்டு அதிரியான்சமாதிஎனும் நாமம மாற்றப்பட்டு, அதனிடமாகக் காஸ்தெல் சான் ஆஞ்ஜெலோஎன்னும் தற்போலதைய நாமம் வழங்குவதாயிற்று. அதன் ஞாபகார்த்தமாகத் தமதுவாளை உறையில்போடும் பாவனையான ஓர்சம்மனசானவரின் சுரூபம் அதில் நிறுவப்படலாயிற்று. இந்தப்புதுமையுள்ள படத்திற்கே இம்மாதம் 1-ந் திகதியன்று பரிசுத்தபாப்பரசர் திருமுடிசூட்டிப் பரலோக இராக்கினியின் திருநாளைப் பிரகடனஞ்செய்யலாயினர்.

## ஜப்பானிய பிரதமரின் புதல்வி

ஜப்பானியபிரதமர் ஷிகேரு யோஷிடா அவர்களின் புதல்வியான திருமதி கசுகோ அசோ ஓர் கத்தோலிக்கமாது. இவள் தனது பதினன்காம்வயதிலே கத்தோலிக்கசமயத்தில் சேர்ந்துகொண்டாள். இவள் முந்த ஜப்பானிலும், பிந்தத் தனதுதந்தையார் லண்டன்நகரிலே 1920—22-ம் ஆண்டுவரை ஜப்பானிய ஸ்தானீகராலயத்தின் முதலாவதுகாரியதரிசியாயும் 1936—38-ம் ஆண்டுவரை [illegible]னிய ஸ்தானீகராயும் இருந்தபோது இங்கிலாந்திலும் கல்விபயின்றாள். தற்போது இவள் மூன்றுமுதல் பதினன்குவரை வயதுகளுள்ள ஐந்து பிள்ளைகளுக்குத் தாயாய்இருக்கின்றாள். இவளின்நாயகர் சீமெந்து, நிலக்கரி வர்த்தகராக விளங்குகின்றார். அத்துடன் துரதிர்ஷ்டவசமாய் அவர் ஓர் அரசியல்வாதியுமென இவள் கூறுகின்றாள். யுத்தம்முடிந்தது முதல் ஜப்பானிலே கத்தோலிக்கதிருச்சபை வெகுவாக விருத்தியடைந்திருக்கின்றது; 1939-ம் ஆண்டு ரோக்கியோ தலைநகரில் கத்தோலிக்க கோவில்கள் மூன்றுமாத்திரமே இருந்தன; ஆனல், இன்றோ நாற்பதுக்கு மேற்பட்ட கோவில்கள் இருக்கின்றன; சென்ற 1953-ம் ஆண்டிலே 20,000 பேருக்குமேற்பட்ட ஜப்பானியர்கள் மனந்திரும்பிக் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்திருக்கிறார்களென இவள் கூறுகின்றாள்.

## அகிலஇந்திய மரியாயின்மகாநாடு

1921-ம் ஆண்டு சென்னைநகரிலே மரியாயின் தேசீயமகாநாடு ஒன்று பெரும்பிரஸ்தாபமாக நடந்தேறியது. அப்போது அநேக அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாரும், பன்னூற்றுக்கணக்கான குருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரீமாரும், பதினயிரக்கணக்கான கத்தோலிக்கமக்களும் அதற்குச் சமுகமளித்திருந்தார்கள். இவ்வாண்டு மரியாயின் புனிதஆண்டு! மாதாவின் அமலோற்பவ சத்தியம் பிரகடனஞ்செய்யப்பெற்ற முதலாவது நூற்றாண்டு. ஆகவே, வருகிறமார்கழிமாதம் 4-ந் திகதி முதல் 8-ந் திகதிவரையில் பம்பாய்நகரிலே அகிலஇந்திய மரியாயின் மகாநாடு ஒன்று பிரபலமாக நடந்தேற விருக்கின்றது. இந்தியாவிலுள்ள அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாரெல்லாம்அதற்குச்சமுகமளிக்க விருக்கின்றார்கள. முதல்இந்திய கருதினலாகும் வலேரியான் கிருசியாஸ் ஆண்டவர் அவர்கள் இம்மகாநாட்டுக்குப் பாப்பரசரின் பிரதிநிதியாக நியமனஞ் செய்யப் பெற்றிருக்கின்றார்.

## கிறீஸ்துஇராசாவின் பாரியசுரூபம்

1940-ம் ஆண்டு போர்த்துக்கால்தேச அதிமேற்றிராணியாரும், மேற்றிராணிமாரும் செய்துகொண்ட ஓர்வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுமுகமாக அங்கு லிஸ்பன் தலைநகருக்கு மேலாகத்தோன்றும் ஓர் உயர்ந்த குன்றின்மீது கிறீஸ்து இராசாவின் 260 அடி உயரமான பாரியசுரூபம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. யுத்தத்திலிருந்து போர்த்துக்கால் காப்பாற்றப் படுமிடத்து அமைப்பதாக வாக்குப்பண்ணப்பட்ட இந்தச்சுரூபம் ஏற்கனவே 80 அடிஉயரத்துக்கு எழும்பிவிட்டது. இதற்குமட்டும் 81,000 பவுண் செலவுபிடித்திருக்கிறது. இதனைப் பூர்த்திசெய்து, தங்கள்நேர்த்தியை நிறைவேற்றிவைக்கத்தக்கதாய் அதிகமான பணம்உபகரிக்குமாறு தற்போது விண்ணப்பஞ் செய்யப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்த்திகை மாதம்

போதுக் கருத்து :— கிராமாந்திர மக்களிடையே விசுவாசம் காப்பாற்றப் பட்டுப் புதுப்பிக்கப்படுதலுக்காக வேண்டிக்கொள்வது.

மிஷன் கருத்து :— மத்திய்அமெரிக்காவிலும், மேற்குஇந்திய தீவுகளிலுமுள்ள வேதபோதக பிரதேசங்களுக்காக மன்ருடிக்கொள்வது.


சத்தியவேத

# பாதுகாவலன்

1954-ம் ஆண்டு
கார்த்திகை மாதம் 25-ந் திகதி


ருஷியாவின்

## தோல்வித்தானம்

ருஷியாவிலே சமயத்தை எதிர்த்து நடாத்தப்பட்டுவரும் குருட்டுத்தனமும், மதிகேடுமான போராட்டத்தை நிறுத்திவிடுமாறு 'பிருவ்டா' என்ற சோவியற் மஸ்கோநகர பத்திரிகை அரசாங்க அதிகாரிகளையும், இராச்சிய பிரசாரகர்களையும் கூவியழைத்திருக்கின்றது. இந்த அதிகாரிகளும், பிரசாரகர்களும் கடந்தகாலத்திலே சமயத்தையும், கோவில்களையும்எதிர்த்துத் தாக்கி நடாத்திய தங்கள் போராட்டத்திலே அபகாரமாக — அதாவது கொடுந்தன்மையாகநடந்து கடவுட்பக்தர்களினதும், சமயப்பற்றுடைய்வர்களினதும் உணர்ச்சிகளை அந்தோ! புண்படுத்திவிட்டார்களேயென்றும் அப்பத்திரிகை குரவையிடுகின்றது. ஆயினும் சமயத்தை எதிர்த்துநடாத்தும் போராட்டமும், பிரசாரமும் தொடர்ந்து நடைபெறத்தான் வேண்டும்;இச் சமயபோராட்டத்தை உக்கிரமாகநடத்துவதில் எட்டுணையுமே இளக்காரமென்பது காட்டாதிருக்கவேண்டும்; ஆனல், இவை சம்பந்தமாய்வழங்கப்பட்டுவரும் அபகாரமும், நிந்தாட்சணையுமான மொழிகளெல்லாம் நிறுத்தப்பட வேண்டுமென்றும் அப்பத்திரிகை புத்தி கற்பிக்கின்றது. இதிலிருந்து நாம்விளங்கவேண்டியதென்ன? சமயவிஷயமாய்ச் சோவியற்ருஷிய தலைவர்களின் நாஸ்திகமனப்பான்மையும், லோகாயத மனப்பான்மையும் இன்னுமே மாறவில்லை; ஆனல், அவர்களின் சமயவிரோதப் போராட்டத்திலும், பிரசாரத்திலும் எதிரிடையான ஏதோ அபாயநிலை ஏற்பட்டிருக்கிறதென்பதே. மற்ருேர்விதமாகச் சொல்லுமிடத்து,சமயத்தையும், கோவில்களையும் எதிர்த்து நடாத்திவரும் போர்ராட்டத்திலே அவர்கள் கையாளும் எளிமையான— இழிவான— எவர்க்குமே குரோதமுண்டுபண்ணுவனவான தகாதவழிவகைகளே சாதாரண ருஷியமக்கள் சமயத்தையும், கோவில்களையும் அதிகமதிகமாக நாடச்செய்துவருகின்றன. சமயத்தை எதிர்க்க எதிர்க்க, அதிகமதிகம்எதிரிடைஅதற்குச் செய்யச்செய்யச் சமயமும், மக்கள்கோவிலுக்குப்போவதும் பிரஸ்தாபமடைந்து வருகின்றனவேயென்று சமீபத்திலே சோவியற் அதிகாரிஒருவர் பிரலாபித்திருப்பதே இதற்குப் போதியசான்ருகும். கம்யூனிஸ்தர்களென்று பகிரங்கமாகத் தங்களைச் சொல்லிக்கொள்ளுகிறவர்கள்தானும் தங்கள்பிள்ளைகள் ஞானஸ்நானம் அருளப்படவும், அவர்களின் விவாகங்கள் கோவில்களிலே நிறைவேற்றப்படவும் அனுமதித்துவிடுகின்ருர்களெனில் பின்னர் பேசுவானேன்? சமயஉணர்ச்சியிலே இவ்விதம் ஏற்படும் வளர்ச்சியைக் கட்டாயம் தடுத்துவைக்க வேண்டுமென்பது சோவியற் தலைவர்களின் கருத்து. ஆனல், ருஷியாவில் சமயஅனுசாரமும், சமயஉணர்ச்சியும் பரந்துவரக் காரணம், சமயத்தை எதிர்த்தும், கோவில்களை எதிர்த்தும் மிதமிஞ்சிய சமயவிரோத ஆவேசம்படைத்த நாஸ்திக பிரசாரகர்கள் கையாண்ட இழிவும், அனுசாரமும், மனதைப்புண்படுத்துவனவுமான முறைகளேயென்பதை அவர்கள் இப்போதுதான் கண்டுபிடித்து, இத்தகைய தகாதமுறைகளைக் கையாளுவதை முற்ருக நிறுத்திவிட வேண்டுமெனக் கட்டளைபிறப்பித்திருக்கிருர்களாம். இது ஆராய்ந்து சீர் தூக்கி அரைமனம், குறைமனமாக அல்ல, முழுமனமாகப் பிறப்பிக்கப்பட்டதாயிருப்பின் — இது சரிவர நிறைவேறுதற்குத் தக்கநடவடிக்கை யெடுக்கப்பட்டுவரின் ருஷியாவிலே சமயசுதந்திரத்தின் உதயகாலமும், கம்யூனிஸத்தின் அஸ்தமனகாலமும் பிறந்துவிட்டன வென்றேநிச்சயமாகச்சொல்லலாம். இற்றைக்குச் சிலகாலமாகச் சோவியற் அரசின் வெளிநாட்டுக்கொள்கையிலும், உள்நாட்டுக்கொள்கையிலும் ஏற்பட்டுவரும் மாற்றத்திலிருந்து இரும்புத்திரை மெதுவாக நீக்கப்படுகிறதென்பது நன்கு புலனுகிறதென்க.




## சதாசகாயமாதா கோணம்

"எங்கள் சீவமே, எங்கள் மதுரமே எங்கள் தஞ்சமே வாழ்க!"

மரியாய் எங்கள் சதாசகாய மாதா. ஏனெனில், "எங்கள் சீவமே, எங்கள் மதுரமே, எங்கள் தஞ்சமே" என்று அன்பாய் அவவை அழைக்கிருேம். அவ எங்கள்சீவம்;ஏனெனில், எங்கள்பாவங்களுக்குப் பொறுதிஅடைந்துதருகிறு. அவ எங்கள் மதுரம்; ஏனெனில், நாம் துக்கசந்தாபப் படும்போது, எவ்வித ஆறுதலும்இல்லாது அவதிப்படும்போது, மரியாய் என்றநாமத்தை உச்சரிக்க— அவ[illegible] எங்கள் துக்கம் பஞ்சாய்ப் பறந்துபோகின்றது. அவ எங்கள் தஞ்சம்; ஏனெனில், எங்கள் கவலைகளைத் தீர்க்கிறு. எங்கள் மாணப்படுக்கைகளைத் துலக்குகிறு. நித்தியசீவியத்தின் வழியைப் பாதுகாக்கிறு.

எங்கள் ஆத்துமங்களைப் போஷிக்கத் தக்கதாக அவைகள்மேல் தேவமாதா விசேஷவல்லமையும், அதிகாரமும் பெற்றிருக்கிறு. வீழ்ந்த சந்ததியின் தாயாராக மாத்திரமல்ல, தனித்தனி எங்கள் ஒவ்வொருவருக்குமே அவதாயாராக இருக்கிறு. யேசுநாதர் பாடுபட்டு, மாணித்தது ஆத்துமஇரட்சணியத்துக்காக. அந்த ஆத்துமாக்களைச் சிலுவையிலிருந்து தம்முடைய திருத்தாயாரின் பாதுகாப்பில் ஒப்புக்கொடுத்தபோது, அந்தநல்லதாயார் எங்கள் ஒவ்வொருவரையும் தமது சொந்தப்பிள்ளையாக அரவணைத்துக் கொண்டா.

எனவே, தாய்க்குரிய கரிசனையோடு அவஎங்களைக் கண்காணித்து வருகிறு. தாம் பெற்றெடுத்த திவ்விய இரட்சகரை நேசித்ததுபோல எங்களையும் நேசிக்கிறு என்றஉண்மையை நாங்கள்சரியாய் உணரும்போது—சிந்திக்கும்போது, அச்சிந்தனை எங்களுக்கு எவ்வளவு ஆனந்தத்தையும், ஆறுதலையுங் கொடுக்கவல்லது!

யேசுநாதசுவாமியின் திருஇருதயம் மனிதர்மட்டிற் கொண்டுள்ள நேசத்துக்குப்பிறகு பூலோக பூச்சிகளாம் எங்கள்மட்டில் தேவதாயார் கொண்டுள்ள நேசத்தைப்போலப் புனிதமான—ஆழமான—உருக்கமான நேசம் வேறுஇருக்க முடியாது. அவ தேவநேசத்தின் கண்ணுடி. அவ தேவபரிசுத்ததனத்தின் பிரதிபிம்பம். தேவனுக்கடுத்தபடியாக அவ எங்கள் எல்லோரையும் உண்மைப்பற்றுடன் நேசிக்கிறு. நாம் நமது திடமான நம்பிக்கையை அவவிடம் வைப்பதற்கு நியாயம் இதுதான். மரியாய் தேவதாய். இரட்சகரின் தாய் எங்களின் தாய். எனவே, அவகேட்பதை கொடுக்கத் தேவனுல் எப்படி முடியாதிருக்கும். எங்களுக்கு ஒத்தாசை செய்யும்படி அவவை அண்டிச் சென்ருல் எங்கள் விண்ணப்பத்துக்கு அவ செவிசாயாதிருக்கவும் முடியுமா?

"சதாசகாய மாதாவே! எங்களுக்குத் தேவையெனக்காணும் சகலவரப்பிரசாதங்களையும் எங்களுக்கு அடைந்து தந்தருளும். எங்களிலும் பார்க்க எங்கள்ஆத்தும இரட்சணியத்தை நீர் ஆசிக்கிறீர். நாங்கள் உம்மைச் சதாசகாயமாதாவென்று அழைக்கவேண்டுமென நீரே விரும்பித்தெரிந்துகொண்டீர். நீர் எங்களை நேசிக்கிறீர் என்று காண்பியும். சதாசகாயமாதாவென்று உம்மைஅழைத்தல் முற்றிலும் பொருந்துமென்று காண்பியும் உமது தாய்க்குரிய அன்புநேசத்தில் எங்கள் நம்பிக்கை யெல்லாம் வைக்கிருேம். எங்கள் இகபரதேவைகளில் எங்களுக்கு ஒத்தாசையாயிரும். சதாசகாய மாதாவே! எங்கள் நேசதாயாரே! இப்போதும், விசேஷமாக எங்கள் மாணநேரத்திலும் எங்களுக்காகவேண்டிக்கொள்ளும்."

---

● புதுடில்லியிலே மகாத்மாகாந்தியின் சமாதிக்கருகில் ஓர் நூதன பொருட்காட்சிச்சாலை அமைக்கப்படவிருக்கிறது. அவரைச்சுடுவதற்கு உபயோகிக்கப்பட்ட துப்பாக்கியும், அவரது பூதவுடல்வைத்துஇழுக்கப்பட்ட பீரங்கிவண்டியும், பிறவும்இதிலே காட்சிக்கு வைக்கப்படவிருக்கின்றன.

—சோவியற் ருஷியவிலும், அதன் சார்புநாடுகளிலும் இப்போதுபோன்று மறைமுகமாக வேதகலாபனை தொடர்ந்து நடைபெறுமானுல், அடுத்த பத்து அல்லது இருபதுவருடத்தில் அந்நாடுகளிலே கத்தோலிக்க குருவானவர் ஒருவரைக் காணமுடியாது என்கிருர், செக்கோசிலவாகியாவிலிருந்து தப்பியோடிவந்துள்ள கத்தோலிக்ககுருவான வண. [illegible] டாமன் சுவாமியார்.

## உத்தமமாதிரிகை தேவதாயாரே

### அங்கிளிக்கன்சபை மேற்றிராணியார் கூறுகின்ருர்

விவாகமான இளம்மாதர்களுக்குப் பரிசுத்த தேவதாயார் ஓர்உத்தமமாதிரிகையென இங்கிலாந்திலே கவென்றிநகர் அங்கிளிக்கன் சபை மேற்றிராணியாரான கனம் டக்றர் நெவில் கோர்ட்ரன் அவர்கள் கூறுகின்ருர்.

"சினிமாப்படங்கள், புத்தகங்கள், பத்திரிகைகள் மூலமாகப் பொதுசன சமூகத்திலே ஆண் பெண்பாலார் நடந்துகொள்ளும் தகாதமுறையானது, வியாபாரப்பொருள் ஆக்கப்பட்டும், பலமாகப் பிரஸ்தாபிக்கப்பட்டும் வருகிறது. இதுசெயல் மெய்விவாகத்தின் கிறீஸ்துவகொள்கையைச் சீர்குலைக்கத் துணைச்செய்தும, அதனைச் சின்னபின்னப்படுத்துவதாகிய இன்றைய உலகின் மாபெருந் தீமையை உண்டுபண்ணியும் வருகின்றது.

"அதனுல் சனசமூகத்திலே ஒருபெரும் பிரிவினரின் உள்ளங்களிலகிறீஸ்துவ மெய்விவாகத்தினதும், மெய்யன்பினதும் அடிப்படையான நோக்கத்தை ஆண்பெண்பாலாரிடையே முற்ருகஎதிர்த்து, விவாகத்தோடும், அதுசம்பந்தமான பிறவற்ருேடும் லோகாயுதத்தை உண்டுபண்ணுவதாகிய ஓர்நிலைமையை நாம் எதிர்நோக்க வேண்டியவர்களாகின்ருேம்.

"நமது திவ்விய கர்த்தரின் திருத்தாயாரைத் தங்களுக்கு உத்தமமாதிரிகையாகக் கொள்வதற்குப்பதில் நமது இளம் பெண்கள் ஹொலிவூட்நடிகைகளைப்போன்று விவாகமெனும் மாறுவேடத்துள் தாறுமாருன விபசாரங்களைப் பின்பற்றுகிருர்கள்" என்று முன்சொன்ன அங்கிளிக்கன்சபை மேற்றிராணியார் எடுத்துக்கூறியிருக்கின்ருர்.

---

## ஐந்துலட்சம் அகதிகள்

5,15,000 பேருக்கு மேற்பட்ட இந்துசீன அகதிகள் கடந்த நான்குமாதங்களிலும் கம்யூனிஸ்த வியற்மின் எல்லையைக்கடந்து, சுதந்திர வியற்நாமுக்குத் தப்பிவந்திருக்கிருர்கள். கம்யூனிஸ்தர்கள் போட்டிருக்கும் இரும்புவேலிகளைத் தாண்டிக்கொண்டும், அவர்களுடைய பீரங்கிகளை மீறிக்கொண்டும் ஆயிரக்கணக்கானேர் இன்னுமே வந்துகொண்டிருக்கின்றனர். இன்னும் எவ்வளவுலட்சம்பேர் வாமுடியாமல் தவிக்கிருர்கள்என்பது தெரியாது. கம்யூனிஸ்தர்களிடமிருந்து தப்பிவரும் அகதிகளைப் பராமரித்து, அவர்களை வாழ்வு பெறச்செய்யும் ஏற்பாடுகளைச் சுதந்திர இந்துசீனம் மேற்கொண்டுள்ளது. சுதந்திர வியற்நாம் பிரதமர் கோ டின் டிம் அவர்கள் கம்யூனிஸ்தர்களிடமிருந்து தப்பிவந்துள்ள இந்துசீனஅகதிகளை வரவேற்று, அருமைத்தோழர்களே என்றழைத்து: "நீங்கள் கம்யூனிஸ்தர்களின் பொய்ப்பிரசாரத்தைக் கேட்கவில்லை; அவர்களின் அடிமை வலையில் விழவில்லை; உங்கள் தியாகச்செயலையும், துணிவையும், சுதந்திரப் போர்வத்தையும் பாராட்டுகிறேன்' எனக்கூறலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்திப்பேறுபெற்ற பட்டஞ்சூடிய
# மரிய அசுந்தா கன்னியாஸ்திரி

மரியாயின் பிரான்சீஸ்கன் மிஷனரிய சபையைச்சேர்ந்த ஓர்கன்னியாஸ்திரியான சிஸ்றர் மரிய அசுந்தா சம்பேதுருவானவர் மகாலயத்திலே முத்திப்பேறுபெற்ற பட்டம் சூட்டப்படுவதைத் தங்கள்கண்ணாரக் கண்டுகோள்வதற்காக அவள்சலுகையினால் அற்புதமாகக் குணமடைந்த இருவரும், அமெரிக்க ஐக்கியதேசத்திலிருந்துபோன அவள் சுற்றத்தவர்களில் இருவரும், சீனாவிலே அவளுடன் தொண்டாற்றிய கன்னியாஸ்திரிமார் இருவரும் சமுகமாயிருந்தார்கள். முத். அசுந்தா சீனாவிலே யாங்ஸிநதி தீரத்திலுள்ள நாய் - யுவான் - பியூஎனுமிடத்தில் 1905-ம் ஆண்டு தனது 27-ம் வயதிலே பரமபதம் அடைந்தாள்.

இம்மாதம் 7-ந்திகதி ஞாயிறுவாரம் சம்பேதுருவானவர் மகாலயத்திலே சங். மரிய அசுந்தா கன்னியாஸ்திரிக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டுகையில், அவள் ஓர்சிறுமியாயிருக்குங்கால் “தான் ஓர்கன்னியாஸ்திரியாய்வர விரும்புவதாகச் சொன்னபோது, அவளைத் திட்டி, வைது, முதுகிற் கையால்அறைந்த” தாக ஒப்புக்கொண்ட ஓர்மனிதரும் அங்கு சமுகமாயிருந்தார். அவர்தான் முத். ரிய அசுந்தாவின் உடன்பிறந்த சகோதரனை 72 வயதுடைய ஜேம்ஸ் பலொத்தா என்பவர். அமெரிக்க ஐக்கிய தேச சிக்காகோநகரிலே ஓர்தச்சுத்தொழிலாளியான இவர் அங்கிருந்தும் ஆகாயமார்க்கமாக ரோமைநகர் சென்றிருந்தார். இவருடன் புதியமுத்திப்பேறுபெற்ற பட்டதாரியின் சகோதரியான திருமதி மதலேனுமார்கிலியும் அத்தேச ரொக்போட்நகரிலிருந்து ஆகாயமார்க்கமாகவே அங்கு சென்றிருந்தாள்.

“எனது சகோதரி ஓர்மனப்பாக்கியமுள்ள ஓர் சிறுமியாய் விளங்கினாள்; ஓர்பிள்ளையாயிருக்கும்போதே குடும்பத்துக்கு ஒசீவனந் தேடும்படியாய் உழைக்கத்தொடங்கினாள்; எனதுசகோதரி எப்பொழுதுமே அதிகம் பரிசுத்தவாளிபோல் இருந்துவந்தாள்; நடுச்சாமத்திலே தனதுபடுக்கையருகில் முழந்தட்படியிட்டிருந்து அவள்செபமாலை சொல்லுவதை அநேகந்தரம் நாம் கண்டதை இன்றைக்கும் ஞாபகப்படுத்தக் கூடியவனாய் இருக்கிறேன்” என்று முத். மரிய அசுந்தாவின் சகோதரன் கூறுகின்றார். திருப்பட்டவைபவத்தின்போது, அசுந்தாவின் சலுகையால் அற்புதமாகக்குணமடைந்த பியான்சன்நகர லூய்ஜி பொடேர்றினி என்பவரும், சமீபத்திலே தத்துவ சாஸ்திர பண்டிதபட்டம் பெற்றுக்கொண்ட சலொறன்நகர லூலியா டிஆர்காஞ்ஜெலோ எனும் மாதுவும் சமுகமாயிருந்தார்கள். இவர்கள் அற்புதமாகக் குணமடைந்தார்களென்பது திருச்சடங்குகளின் ஆராய்ச்சித் திருச்சங்கத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டதாகும்.

முத். அசுந்தாவுடன் சீனாவில் தொண்டாற்றிய இருகன்னியாஸ்திரிமாரும் திருப்பட்டவைபவத்தின்போது பிரசன்னமாயிருந்தனர். அவள் மரணமடைந்தபின் அற்புதவிதமாக நறுமலர்களின் சுகந்தஓர்வாசனை உண்டாய்க் கன்னிகாமடமுழுவதும் நிறைந்திருந்ததென இருவரும் கூறுகின்றனர். இற்றைக்கு இருபதுவருடங்களின் முன் அவளின்உடல் கல்லறையினின்று வெளியே எடுக்கப்பட்டபோது, அது அழியாதிருக்கக் காணப்படலாயிற்று. திருப்பட்டஞ்சூட்டிய அன்றுசாயந்தரம் புதியமுத்திப்பேறுபெற்ற பட்டதாரிக்குப் பாரம்பரியமான வணக்கத்தைச் செலுத்துவதற்காகப் பரிசுத்தபாப்பரசர் சம்பேதுருவானவர் மகாலயஞ் சென்றபோது, அங்கு 25,000 பக்தர்கள்குழுமியிருந்து அவரை வாழ்த்தினார்கள்.

---

### வெளிஉலகை அறியாதமக்கள்

சென்ற ஐப்பசியிலே ருஷியாவைத் தரிசிக்கச்சென்ற பிரித்தானியபாராளுமன்ற அங்கத்தவர்கள் கோஷ்டியின் தலைவராகிய கொலறேய்ண்பிரபு கார்த்திகை 5-ந் திகதியன்று லண்டன்நகரிலே பத்திரிகை நிருபர்கள் கூட்டம்ஒன்றில் பேசியபோது: “ருஷியாவிலுள்ள சாதாரணமக்களுக்கு வெளிநாடுகளில் நடக்கும்சம்பவங்களைப்பற்றி ஒன்றுமேதெரிவதில்லை; இதற்கு முக்கிய காரணம், ருஷிய அதிகாரவர்க்கத்தினர் வெளிநாடுகளைப்பற்றிய செய்திகள் ருஷியமக்களுக்கு எட்டாவண்ணம் பல்வேறு தடைகள் ஏற்படுத்துவதில் அதிககவனம் செலுத்தி வருவதே” எனக்கூறலாயினர். நிற்க, சீனாவிலே பதின்மூன்றுநாள் தங்கியிருந்தபிறகு இந்தியாவுக்குத் திரும்பிய பண்டித நேருஅவர்கள் கார்த்திகை 3-ந்திகதியன்று கல்கத்தாவிலே பெரியகூட்டம் ஒன்றில் பேசியபோது: “சீனாவிலுள்ள பத்திரிகைகள் நமது இந்தியபத்திரிகைகளைப் போன்றன அல்ல; இந்தியாவிலே பத்திரிகைகள் அரசாங்கத்தைத் தாக்கியெழுதத் தயங்குவதில்லை; அவ்வாறே மத்தியசட்டசபைகளிலும், மாகாண சட்டசபைகளிலும் அங்கத்தவர்கள் அரசாங்கத்தைத் தாக்கிப்பேசத் தயங்குவதில்லை; சீனாவிலோ அரசாங்கத்தை எதிர்க்க வழியேயில்லை; பத்திரிகைகள் அரசாங்கத்தைத் தாக்கத் துணிவதில்லை; சீனமக்களுக்கு வெளிநாடுகளில் நடக்கும் சம்பவங்களைப் பற்றி ஒன்றுமே தெரிவதில்லை” எனக் கூறியிருக்கின்றார்.

---

நல்லூர் மீசாம்

### திருநெல்வேலி
### அர்ச். பிரான்சீஸ்சவேரியார்
### திருநாள்

நோவனைகள் 24-ந்திகதி புதன்கிழமை ஆரம்பமாகி மார்கழிமாதம் 3-ந்திகதி முடிவாகும்.

நோவனைகள் தினமும் மாலை 7-30 மணிக்குத் தொடங்கும்.

2-ந்திகதி வேஸ்பர் 8 மணிக்கு.

3-ந் திகதி காலை 6 மணி தொடக்கம் தனிப்பூசைகள் நடைபெறும். 7-30 மணிக்குப் பாடற்பூசை, திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் நடக்கும்.

J. A. Francis, O. M. I.

---

# மரியன்னை மான்மியம்

தரவு கொச்சகம்

(ஆசிரியர், எஸ். எஸ். றெட்றிகோ — குடாப்பாடு)

அண்டசரா சரமெல்லாம் அழகுறவே சிருட்டித்து
அண்டமெங்கு மடங்காதே அருவுருவ மாய்நிறைந்த
அண்டர்தொழு மாதிபரன் திருவுளத்தே யாதிமுதல்
மண்டலங்க ளேத்தவரு மாதரசி யாயிருந்தாய். (1)

ஆதிமுதல் மனுவென்னும் ஆதாமின் வழிவந்த
தீதுதனில் மாகொடிய தீதென்னும் பாவவிடம்
மேதினியிற் சேராதே மேன்மையொடு தானுதித்துச்
சோதிமிகு மாவரங்கள் சூழ்சுகுண வதியானாய். (2)

நச்சலகை வஞ்சனையால் நரர்தன்னை வெய்த்ததினால்
அச்சமுற உலகினிலே அடர்ந்திருந்த பாவவிருள்
நச்சறவே உச்சிமிதித் தூயவனை நாமுய்ய
எச்சமதா வீன்றளிக்கும் ஈடில்லா மணியானாய் (3)

முன்னமொரு காலமதில் முன்னவனார் மாமலையில்
அன்னமெனத் தானருளு மாணைகளை மறந்தோரைச்
சொன்னபடி பிரளயத்தாற் றுஞ்சச்செய் கால்நோவா
இன்னலற மீள்பேழை எழிலுருவாய் நீயுதித்தாய். (4)

அலகில்லா இறையவனார் அரிதாக வதிதற்காய்
உலகுள்ள அழகெல்லா மொருங்காக வமையேந்தல்
சலமோனி னிணையில்லாச் சம்பிரம வாலயமே!
தலமீதே யொளிகாலுந் தங்கச்சிம் மாசனமே! (5)

தரணியிலே பவமென்னுஞ் சதிகண்டு கதிகலங்கிச்
சரணமே தெனவேங்கிச் சஞ்சலத்துள் முக்குளிக்கும்
தருணத்தே கைதந்து தஞ்சமெனத் துயர்நீக்கி
வருணனொடு பின்னெழுந்து வருமரிய வானவில்லே! (6)

அடும்பாவ வலைவீசி அனுதினமும் பகைத்துவருங்
கொடும்பேயின் தந்திரத்தாற் கோடவிடாச் சீர்மதிலே!
நெடும்படையோன் தாவிதன் நிறைகலங்கள் செறிந்துஒளி
விடுமழகார் தந்தமய உப்பரிகை யாமனையே! (7)

அலைவிரியும் பரவையின்மேல் அவிர்துய்ய ஒளிமீனே!
கலைமதியக் கிரணமெனுங் கருணைக்கண் மரியாயே!
இலகுபல பொருளெவையு மீயுமிறை வதியுமொரு
அலகில்லா வழகுவரம் ஆன்றதிருப் பெட்டகமே! (8)

மலைமேவு முட்செடிக்கண் மலரும்றோ சாமலரே!
கலைமேவு தண்மதியைக் காலணியாய்ப் பூண்டவளே!
சிலைமேவு மாரணங்கே திருமுடியாய்ப் பன்னிருமீன்
தலைமேவு மோசேசின் முட்செடியே! தாய்மரியே! (9)

வானிருந்து பூமிவரை வானவர்கள் மாறிவர
ஏணியெனக் காட்சிதரும் எழிலணங்கே மாமணியே!
மானிடரை வானுலக வழிநடத்து மாவடமே!
மானிலத்தி லெம்மைநிதம் வாழ்விக்கும் மாதரசே! (10)

ஆதிபரன் சித்தமதா யம்புவிமேல் தேர்ந்துகொண்ட
யூதகுலம் வேரறுக்க யுத்தஞ்செய் மன்னவனை
ஏதமுறச் சிரங்கொய்த எழிலணங்கு யுதித்தாகப்
பாதகப்பேய் சிரநசுக்கப் பாக்கியமாய் வந்தவளே! (11)

பஞ்சமுற்ற நாடெகிப்த்தைப் பாதுசெய்த யோசேப்பை
மஞ்சுலவு சீர்மிக்க மாதிராக்கேல் தோன்றவைத்தாள்
பஞ்சையுறும் மானிடர்வாழ் பாருலகை மீண்டளிக்க
அஞ்சுகா யப்பரனை அன்னைமரி நீயளித்தாய். (12)

மண்ணுலகிற் றோனுதித்த மாதர்களில் நீயொருத்தி
சென்மவினை தீண்டாத செம்மலராய் நின்றாயே
கன்னிமையே குன்றாத காரிகையே! கற்பகமே!
மன்தவிது குலமேவு மரகதமே! நாயகியே! (13)

வார்த்தையெனுந் தேவசுதன் மாமிசமாய் வந்துதிக்கப்
பாத்திரமாய் நின்றிலங்கும் பாசமலர் றோசாவே!
சேத்திரமாம் மோட்சமதிற் றேவகரத் தேயிருக்கும்
மாத்திரையாம் மாமருந்தே மாதவத்தின் சுந்தரியே! (14)

அலகைதனின் வலைதனிலே ஆழ்ந்தோரைத் தேவசுதன்
சிலுவைதனி லீடேற்ற சீவபலி யாம்வேளை
உலகுக்குத் தந்தருளும் ஒப்பற்ற தாயாகத்
தெளிவுற்ற தேவாதி தேவஅன்னை நீயன்றோ! (15)

---

பாச = அழகிய

---

### நன்றியறிந்த தோத்திரம்

தேவனின் விசேஷ இரக்கத்தாலும், சதாசகாயமாதாவின் சலுகையாலும், கோடி அற்புதரான அர்ச். அந்தோனியார், அர்ச். பத்தாம்பத்திநாதர் இவர்களின் உதவியினாலும் எனது பரீட்சையில் சித்தியடைந்தேன். நேர்த்திப்படி இதனைப் பிரசுரிக்கிறேன்.

— எஸ். பி.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சதாசகாய மாதாவிடம் அருந்தி வருந்தி நாளுக்குநாளாக இரந்துகேட்டு வந்த அசாத்தியமான ஓர்காரியம் அற்புதவிதமாகக் கிடைக்கப்பெற்றுக், கஷ்டமெல்லாம்நீங்கி ஆறுதலும், சந்தோஷமும் அடையலானேன். அவளின்நாமம் எங்கும் புகழப்படுவதாக. இதை நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.—மாதா பக்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலர் பக்கம்

## அண்ணு சொல்லுவது:

அருமைச் சகோதரங்களே!

நான் கோட்டுக்குப் போனேன் என்று கூறியது உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?

வழக்கில் எனது சிநேகிதன் குற்றஞ் சாட்டப் பட்ட போதிலும், நான் உண்மை பேசினேன். நீதிபதி வழக்கை விளங்கி விட்டு, மற்றச் சாரதிதான் குற்றவாளியெனக் கணடார். ஏனெனில், அவன் சட்டத்துககு விரோதமாக அதிகம் விரைவில் காரைச் செலுத்தினன். அதுமாத்திர மல்ல, மதுபானமும் அருந்தி யிருந்ததாக ஊர்க்காவலர் அறிந்தனர்.

பார்த்தீர்களா உண்மை பேசியதினல் ஒருதீங்கும் நேரவில்லே. உண்மை ஒருவருக்கும் பொல்லாங்கு செய்யாது. எப்போதும் உண்மை பேசுங்கள். சுபம்!

உங்கள் அன்புள்ள அண்ணு

---

## 'WAITING'

28-10-54-இல் வெளியான பாதுகாவலனில் மேலேயுள்ள தலேயங்கத்தின்கீழ் இருந்த ஆங்கிலக் கவிதையைத் தமிழாக்கம்செய்து பலர் 'அண்ணு'விற்கு அனுப்பி இருந்தார்கள். அவற்றுள் தகுதியானவற்றைக் கீழே தருகின்ருேம்.

### காத்திருக்கிறேன்

இன்று நான் உன்முகம் காணவில்லே;
நீ எங்கு சென்ருய்?
இங்கு நூற்றுக் கணக்கானேர் செபிக்க வந்தனர்;
நீ எங்கு சென்ருய்?
நான் எனது சிறைக்கு வெளியே
முழந்தாளிட்டுப் புகழும் ஆயிரவரை
ஊன்றி நோக்கினேன்.
உனக்கு நேரம் இல்லே! ஓ! நீ அப்படிச் சொன்னுய்;
நீ எங்கு சென்ருய்?
என்னுடைய துக்கம் நிறைந்த இருதயம்
தனிமையிலே இரத்தம் சொரிகையில்
நீ எங்கு சென்ருய்?
உன் சிநேகிதர்களுடன் எத்தனேயோ மணித்தியாலம்
நீ செலவிட் டுள்ளாய்.

ஆ. சிசிலியா,
திருக்குடும்ப கன்னிகா மடம்,
ஆங். பாடசாலே, யாழ்ப்பாணம்.

### காத்திருத்தல்

இன்றைக்கு நான் உன் முகத்தைக் காணவில்லேயே!
நீ எங்கே இருந்தாய்? [வந்தாரே
நூற்றுக் கணக்கானேர் செபஞ்செய்ய
நீ எங்கே இருந்தாய்?
முழந்தாளிலிருந்து தோத்திரித்த
ஆயிரக்கணக்கானேரை
என்மறியற் கூடத்திலிருந்து நான் பார்த்தேன்
உனக்கு நேரமில்லே; ஆ!
அட்படித்தானே சொன்னுய்
நீ எங்கே இருந்தாய்? [கமாக
எனது துக்கமுள்ள இருதயம் அந்தரங்
இரத்தம் சிந்தியபோது
நீ எங்கே இருந்தாய்?
உனது சிநேகிதர் மத்தியில்
நெடுநேரம் செலவழித் திருக்கிருய்.

ஜெயமணி பீற்றர்,
மாதகல.

### பார்த்துக் காத்திருக்கிறேன்

இன்று உன்வதனம் கண்டிலனே
எங்கேகி நின்றனே நீ?
உன்னே யன்றிச் செபிக்க ஒருநூறு பேர் வந்திருந்தார்;
எங்கேகி நின்றனே நீ?
என்சிறையிலிருந்தே முழந்தாட் படியிட்டுத் துதிசெய்த
ஆயிரவரை உற்றுப்பார்த்து நின்றேன்
சமயம் உனக்குக் கிட்டவில்லே, ஆ!
நீ சொல்லுவது அதுதானே!
எங்கேகி நின்றனே நீ?
சோகித்த என்னிதயம் தனிமையிலே இரத்தஞ்சொட்ட
எங்கேகி நின்றனே நீ? [நேரம்
அன்பர்கள் மத்தியிலே அநேகமணி
ஆனந்த மாய்க் கழித்தாய்.

பி. தெரேசா பல்டானே,
ஆர். சி. பெண்பாடசாலே, பேசாலே.

---

ஆசிரியர்— வில்லி, நீ எழுதிவந்த சரித்திரபாடம் மிகமோசமாய் இருந்தது; அதனல் திரும்ப இருபதுமுறை எழுதிவரும்படியாகச் சொல்லியிருந்தேன்; நீ பத்துமுறை மாத்திரந்தானே எழுதி வந்திருக்கிருய்;

வில்லி— ஆம், சார், எனக்குக் கணக்குப்பகுதியும் அவ்வளவு போகாது என்று இப்போதாவது தாங்கள் கண்டுகொள்ளவில்லேயா?

## ஆகமனத்தின் 1-ம் ஞாயிறு

### நிருபம்

இன்றையநிருபம் சின்னப்பர் ரோமருக்கு எழுதிய நிருபத்திலுள்ளது.

ஆகமன காலம் எதிர்பார்க்குங் காலம். நம்பிக்கை உண்டாக்கவேண்டிய காலம். இரட்சகரை வழிநோக்குங் காலம்.

உலகம் ஓர் இரட்சகரை எதிர்பார்த்திருந்தது. தெரியப்பட்ட தேவப்பிரசைகளானயூதர் இரட்சகருடைய வருகையை ஆவலாய்க் காத்திருந்தார்கள். மற்றுஞ் சனங்களுக்கும் இது தெரியும். ரோமருடைய புலவரும் இதைக் குறிப்பிட் டிருந்தார்கள்.

அதைத் தொட்டுத்தான் சின்னப்பர் நித்திரை விட்டு விழித்திருக்க நேரமாயிற்று என்கிருர். உறங்கிக் கிடக்கும் அவர்களுடைய உணர்ச்சிகளேக் கிள்ளி அருட்டுகிருர், உற்சாக மூட்டுகிருர்.

விடுதலே ஏதோஒருநாள் வருமென்று இவ்வளவு நாளும் இருந்தோம். ஆனல்... இதோ வந்துவிட்டது. நாங்கள் கருதியிருந்ததிலும்பார்க்க அதிகம் விரைவில், அண்மையில் அணுகிவிட்டது. கிறீஸ்துநாதர் வந்துவிட்டார்... புதியஏற்பாட்டின் காலம் இது.

விடிந்து விட்டதென்றல் செய்ய வேண்டுவது என்ன? கண்ணேக் கசக்கி உறக்கத்தைப் போக்க வேண்டும்; போர்வையை மடிக்கவேண்டும். படுத்த பாயைச் சுருட்டவேண்டும், பல் விளக்கிக் கால்முகம் சுத்திசெய்து கொள்ளவேண்டும்.

இதைத்தான் ஞானவிதமாக விளக்குகிருர் சின்னப்பர். இரவு கழிந்து பொழுது புலர்ந்தது... இருட்டுக்குரிய செயல்களே விட்டுப்போட வேண்டும். யோக்கியமாய் நடக்கவேண்டும்... பட்டப்பகலில் பெரியதெருவில் நடப்பதுபோல.

இருட்டுக்குரிய செயல்கள் எவையென்றுதெரியாதா? உண்பது, குடிப்பது (மட்டுமீறி); அவைகளால் விளேயும் தகாதஉறவு, அசுத்தநடை, சண்டை சச்சரவு, வாது சூது, எரிச்சல் புகைச்சல்.

ஞானவெளிச்சம் அற்றவர்கள் இப்படி நடந்துகொண்டார்கள். அவர்களே நாமும் பின்பற்றி விட்டோம்...... இவ்வேளே இவையெல்லாவற்றையும் கைவிடவேண்டும்.

கைவிடுவது மாத்திரமல்ல... கால்முகங் கழுவுவதும்மாத்திரம் போதாது. சுத்தமான உடையணிந்து கொள்ள வேண்டும். இருட்டுச் செயல்களே விட்டுக் கிறீஸ்துநாதரை அறிந்து கொள்ளுதல் வேண்டும். சொல், செயல் யாவும் சிந்தனேயுடன் ஒருமித்துக் கிறீஸ்துநாதரைப் பிரதிபிம்பிக்க வேண்டும்.

— சருவேசுரனுக்குத் தோத்திரம்.

---

## விடை கூறுங்கள்

### வசனப்பகுதி

1. முகம் மலர்ந்த சிரிப்பிலும்,
தேவனுக் குகந்த சிறுமைத் தனத்திலும்,
தூய வெண் லீலி மலரிலும்,

இனிய ஓசை யுடைய யாழிலும் ஓர் அர்ச்சியசிட்டவள் மறைந்திருக்கிருள். அவள் திருநாளே அண்மையில் நாம கொண்டாடினேம். அவள் யார்? அவள் திருநாள் எப்போது? அவள் யாருக்குப் பாதுகாவலாளியாக இருக்கிருள்?

* * *

1. இதில் மையுண்டு. பேனுவுக்குள் விடவும் முடியாது. எழுதவும் முடியாது. அது என்ன?

2. இந்த வில்லில் வேடன் அம்பு தொடுக்கவும் முடியாது. நம்மால் [illegible] முடியாது. அது என்ன?

3. இச்சித்திரம் ஓவியனின் கற்பனேக்கும், கவிஞனின் காவியத்துக்கும் அப்பால் உள்ளது. அது என்ன?

ஆ. சிசிலியா
தி. கு. க. மடம், ஆங்கில பாடசாலே,
யாழ்ப்பாணம்.

### கணிதப்பகுதி

சில யானேகள் ஓரே சமமாக மூன்று பாதையால் புறப்பட்டு ஐந்து குளங்களில் ஓரே சமமாக நின்று தணணீர் குடித்து, சமமாக ஏழுபாதைகளால் போய் ஓரே சமமாக ஒன்பது கட்டைகளில் கட்டப்பட்டன. புறப்பட்ட யானேகள் எத்தனே?

* * *

45-இல் 45-ஐக் கழித்து 45 மிச்சம் வரவேண்டும். கழியுங்கள் பார்க்கலாம்?

என். சுவாம்பிள்ளே,
கருநாட்டுக்கேணி, கொக்கிளாய்.

* * *

1. தமிழ்ப் பாஷையில் நான்கு எழுத்துகள்கொண்ட ஓர்சொல் இருக்கிறது. இந்தச்சொல்லில் 1-ம் எழுத்தைத் தனியேஎடுத்தால் போர்த்துக்கேய பாஷையில்உள்ள ஒருசொல் வரும். 2-ம் எழுத்தைத் தனியே எடுத்தால் தமிழ்ப்பாஷையிலுள்ள ஒரு சொல்வரும். 3-ம், 4-ம் எழுத்துகள் இரண்டையும் தனியேஎடுத்தால ஆங்கில பாஷையிலுள்ள ஒருசொல்வரும். இந்த மூன்று பாஷைகளிலுமுள்ள மூன்றுசொற்களும் ஒரேகருத்துள்ள மூன்றுபாஷைச் சொற்களாயும் இருக்கும். அந்த நான்கு எழுத்துகளேயும் கொண்ட சொல்லென்ன?

2. கறி சமைக்கும்போது கடைசியில் முதல்பாலும் விட்டு, எலுமிச்சம் புளியும் விட்டபின் முடிவில் வேறு எதைவிட்டு இறக்குவார்கள்.

3. ஆண்டவர் மோயீசன் மூலமாக நமக்குப் பத்துக் கற்பனேகளேச் சீனுமலேயில் எழுதித்தந்ததுபோல, ஓர் அர்ச்சியசிட்டவர்மூலமாய் ஒருசபையை உண்டாக்கி, அச்சபையின்ஒழுங்குகளேயும் அவர்மூலமாகவே கொலம்பெண்ணும் மலேயில் எழுதிக் கொடுத்தார். அது எந்தச் சபை? அந்த அர்ச்சியசிட்டவர் யார்?

4. குருத்துவ 7-ம் பட்டம் பெருமலே குருமாரின் சபைஒன்றுக்குச் சிரேஷ்டராயிருந்த அர்ச்சியசிட்டவர் யார்?

எஸ். என். ரி. பிரகாசம்,
யாழ்ப்பாணம்.

---

### [ நத்தால் படம் ]




இதோ, இந்தப் படத்தைப் பாருங்கள். இதில் எவரைக் காண்கிறீர்கள். நன்ருய் உற்றுப் பார்த்துவிட்டு, இதைப் பற்றி நகைச்சுவையான ஓர் சம்பாஷணே அல்லது சிரிப்பான ஒரு சிறுகதை எழுதி அனுப்புங்கள் பார்க்கலாம்.

நத்தால் குடிலுக்கேற்ற பதினறு படங்கள் அடங்கிய பிரதி ஒன்று 10 சதமாக எம்மிடத்தில் விற்பனேக்கு ஆயத்தமாய் இருக்கின்றது. தபாற் செலவு வேறு.

மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நுத்தால் படம்)




கு
று
—
கு
று
—
கு
று
க்
கு
று

புறுவே, புறுவே, எனது செல்வ மாடப் புறுவே! இத்தனை நாளும் நீயும், நானும் இனிதே விளையாடிப் பொழுது போக்கி வந்தோம் அல்லவா?

புறு— குறு — குறு — குறுக்குறு (ஆம், ஆம், அண்ணு)

அன்ரன்— உன்னை இன்று எங்கே கொண்டு போகிறேன் என்று உனக்குத் தெரியுமா?

புறு — குறு — குறு — குறுக்குறு (இல்லை, இல்லை, அண்ணு)

அன்ரன் — சொல்லுகிறேன் கேள். உன்னை இன்று ஒரு நல்ல இடத்துக்குத்தான் கொண்டு போகிறேன். தெரிகிறதா?

புறு— குறு — குறு — குறுக்குறு (ஏன், ஏன், அண்ணு)

அன்ரன்— அங்கே ஓர் இடத்தில் மாதா நூல் நூர்த்துக் கொண்டு இருக்கிறு. அவவுக்கு முன்பாகச் சின்ன யேசு பாலன் உன்னைப் போன்ற சில வெள்ளைப் புறுக்களுடன் அன்பாகச் சிரித்து விளையாடிக் கொண்டு இருக்கிறுர். நீயும் அவரோடு ஒருகால்விளையாடவேண்டும் என்றதுதான் எனக்கும் ஒரு ஆசை. அதற்குத் தான் உன்னைக் கொண்டு போகிறேன். உனக்கும் அவரோடு விளையாட ஆசை தானே.

புறு—குறு—குறு—குறுக்குறு (ஆம், ஆம், சம்மதமே)

அன்ரன்— அவர் எங்கே இருக்கிறுர் என்று உனக்குத் தெரியுமா?

புறு— குறு — குறு — குறுக்குறு (இல்லை, இல்லை, தெரியாது)

அன்ரன்— அவர் கோயிலில் இருக்கிறுர். உன்னைக் கண்டதே அவர் கட்டாயம் ஓடி வந்து இரண்டு கையாலும் ஏந்தி வைத்துக்கொண்டு உன்னுடன் கொஞ்சி விளையாடுவார். உனக்கு நல்ல தீனிபோடுவார். அப்போது புளுகிக் கொண்டு நீயும் பொறுக்கித் தின்பாய் தானே!

புறு— குறு — குறு — குறுக்குறு (ஆம், ஆம், தின்பேன்)

அன்ரன் — ஒரு காரியம், நீ சின்ன யேசுவுடன் கொஞ்ச நேரம் விளையாடி விட்டு என்னிடம் வந்துவிட வேண்டும். சிலவேளை அவருடன் நின்றுவிடப் பார்ப்பாய்.

புறு— குறுக்குறு — குறு — குறுக்குறு (என்னை விடா விட்டால்)

அன்ரன் — அவர் விடுவார் கட்டாயம். விடா விட்டால் நான் என்ன செய்வேன் தெரியுமா? மாதாவிடம் போய் அழுது கொண்டு சொல்லுவேன். அவ கட்டாயம் வாங்கித் தருவா. அந்தா பார் யேசுபாலன் புறுக்களுடன் விளையாடு வதை. நீயும் பறந்து போய் அவருடைய தோளில் அமர்ந்து கொண்டு விளையாடி விட்டுக் கெதியாக வந்துவிடு. அதோ! உன்னை அவரும் பார்த்து விட்டார். சுணங்காது பறந்து போ.

— அரசு

## எங்கள் இராணி

"யுவன்"

1. தேவ வரப்பரி பூரணி — எங்கள்
தீமை களைந்தருி வாரணி
சீவ வரம்பெறக் காரணி — இவள்
சென்மித்தாள் மாசின்றித் தாரணி.

2. பாவிக்க டைக்கல மானவள் — இந்தப்
பாருக்கு நன்மருந் தானவள்
ஆவிக்குத் தேவியென் றுனவள் — எல்லா
அன்பர்க்குந் தேற்றர வானவள்.

3. சுற்றிடச் செங்கதிர் பூண்டவள் — சுடர்
சூழ்ந்திட மீன்முடி சூண்டவள்
அற்றிட ஆவிபின் மீண்டவள் — அடர்
ஆகுலந் தீர்க்குமெம் ஆண்டவள்

4. திங்கள் திருப்பதந் தோய்ந்தவள் — வாள்கள்
*தீயுமி ழேழகம் பாய்ந்தவள்
துங்கக்கல் வாரியிற் சாய்ந்தவள் — வெகு
தூயகன் னிப்பலம் வாய்ந்தவள்

5. பேயிடர் வென்றிடக் கூடுவோம் — பெரும்
பேறுகள் பெற்றிடத் தேடுவோம்
தாயிவள் பாதத்தை நாடுவோம் — தீர்க்க
தண்டனிட் டேபுகழ் பாடுவோம்

* தீயுமிழேழகம்— அக்கினிகக்கும் ஏழு நெஞ்சில்
(தீ+உமிழ்+ஏழு+அகம்)

## நேரந் தப்பவில்லை!

வில்லி எப்போதும் பாடசாலைக்குப் பிந்திவருவான். அடிவாங்கி அலுத்துப் போனுன். டக்றர் ஒருவரிடஞ் சென்று குளிகை மருந்து வாங்கிவந்தான். அன்று இரவு இரண்டு குளிகைகளைச் சாப்பிட்டு விட்டுப் படுத்தான்.

பின்பு மணிச் சத்தம் கேட்காமலே எழுந்து பரபரப்பாய்ப் பாடசாலைசென்றுன். "இன்றைக்கு ஒருகரைச்சலும் இல்லாமல் வெள்ளென எழும்பிவிட்டேன், சார்" என்றுன்.

"அதுசரி, நேற்று எங்கேபோனுய்?"

## சரியான விடைகள்

வசனப்பகுதி :

பணம் பந்தியிலே, குலம் குப்பையிலே. பந்திக்கு முந்து, படைக்குப் பிந்து என்ற இரண்டு பழமொழிகளும் வரும். ஏதாவது ஒன்றை விரும்பியவாறு நிரப்பிக்கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| ப | ண | ம் | கு |
| பை | யி | லே | ல |
| ப் | யி | லே | ம் |
| கு | தி | ந் | ப |

கணிதப்பகுதி :

| | |
|---|---|
| 13 பலகாரம் | $3\frac{1}{4}$ சதம். |
| 5 முட்டை | $3\frac{3}{4}$ சதம் |
| 2 இனிப்பு | 3 சதம். |
| 20 சாமான் | 10 சதம். |

இருபகுதிகளுக்கும் சரியான விடைகள் அனுப்பியவர்கள் :

குணராணி அருளானந்தம்,
ஏழாலை.

டி. அத்தனுஸ்,
ஆர். சி. பாடசாலை, புங்குடுதீவு.

எவ். துரைராஜா,
ஆர். சி. பாடசாலை, புங்குடுதீவு.

க. சவிரிமுத்து,
றே. க. பாடசாலை, புங்குடுதீவு.

கணிதப் பகுதிக்கு மாத்திரம் சரியானவிடை அனுப்பியவர்கள் :

எஸ். எம். அமானுல்லா,
அரசடிப் பாடசாலை, மட்டக்களப்பு.

பொ. சிங்காரயர்,
அல்லைப்பிட்டி.

ஏ. சிசிலியா,
திருக்குடும்ப கன்னியர் மடம்,
யாழ்ப்பாணம்.

## மாதோட்டத் தபால்

(நாட்டுத்தூதன்)

நமது ஸ்ரீலங்காதுவீபம் சுதந்திரமடைந்த பிறகாவது பொருளாதார விருத்திபெற்று, மக்களுக்குஆவசியகமான சௌகரியங்கள்பல ஓரளவுக்காவது கூடுதலாகக் கிடைக்குமென்றநம்பிக்கை எவரிடத்துமே பெரும்பாலும் குடிகொண்டிருந்தது. ஆயினும் பல்வேறு ஆக்கவேலைகளும் ஸ்ரீலங்காவின் தென், மத்திய, கீழ்ப்பகுதிகளில் அதிவேகமாக நடைபெற்றுவருவது யாவரும்நன்குணரக் கூடியதே. முதன்முதலாக "மல்வத்தைஓயா"த் திட்டம் கடைக்கணிக்கப்பட்டுப் பின்வந்த "கல்லோயாத் திட்டம்" விரைவாக முடிவடைந்துவரக் காண்பதே இதற்குப்போதிய சான்றுகும். இன்னும் காலந்தோறும் இப்பகுதிக்கு அரசாங்கசபைப் பாராளுமன்றப் பிரதிநிதிகளாகவந்த பிரமுகர்களும் இதோ! மல்வத்தைஓயாத் திட்டத்தைச் சொன்னபடியெல்லாம் பூர்த்திசெய்து வைக்கிறேமென வாய்ப்பறையறைந்து வந்தனரேயல்லாது காரியங் கைகூடவேயில்லை. இப்பகுதிப் பிரதிநிதிகள் ஓர்காலத்தில் மந்திரிசபையில் அங்கத்துவம் வகித்துத்தானிருக்கின்றனராம். அப்பொழுதும் இந்த முக்கியவிஷயம் கடைக்கணிக்கப்படாமலே விட்டதாம். நாட்டின் நாடிபோன்ற—இராத்தாசயம் போன்ற கட்டுக்கரைக்குளத்தை இதுகாலம்வரை கனவிலும் நினைத்தவர் எவர்? அவர்களுள் ஒரேயொரு பிரதிநிதியாகத் திரு. ஜே. தியாகராஜா அவர்கள் இதிலே மிகுந்தஅக்கறை எடுத்தாராயினும் நாம்அவரைக் கைவிட்டுவிட்டோம். இப்பெரிய கொடையாகிய கட்டுக்கரைக்குளத்தை நீர்வளப்படுத்துவதைவிட முழுத்திற்கொரு கலாசாலைகளையல்ல, கல்லூரிகளையே கட்டிவிடுவது நலமெனஉணர்ந்தனர். அதனுல் அரசாங்கபணத்தை அவம்போக்கத் துணிந்தனர். அம்மட்டா! ஆங்காங்கு வாசிகசாலைகளை அமைத்துக் கவியின்பம், கதையின்பம் நுகரச்செய்வதே அல்லாது வாய்க்கால் வடிகால்களை அமைத்துப் புராதன குளங்களைப் புதுக்குவித்துக் கமத்தொழிலை அதிகமதிகம் விருத்தியாக்க எவரேனும் கூடியமுயற்சி எடுக்கிறுர்களா? அடிக்கொன்றுக அமைக்கப்பட்டிருக்கும் ஆகாயவசனிகள்தானு வயிற்றுக்கு ஆகாரந்தரப்போகின்றன? இன்னும் இப்பகுதியிலே இளம்வயதில் பிரசவஆரம்பத்திலே மடியும்பெண்கள் எத்தனை? இதற்குக்காரணம் தகுந்த பிரசவ பராமரிப்பின்மையே என்பதை நாட்டுத்தொண்டர்கள் எவராவது உணர்ந்தனரா? உணர்ந்து அதற்குத் தகுந்த போதிய மருத்துவமாதரை ஆங்காங்கு நியமிக்கும்படிசெய்ய முயன்றனரா? பண்டைய மாதோட்ட வைத்தியசாலைஎன மதிக்கப்படும் அடம்பன் ஆஸ்பத்திரிக்குப் பிரதம டக்றர்ஒருவர் வந்துவிட்டாரா? அல்லது அடுக்கடுக்காக இன்னும் அப்போதிக்கரிமாரே வந்துகொண் டிருக்கின்றனரா? இவற்றையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கிவிட்டுச் சாணுக்கொரு தபால் ஆபீஸ்களை மட்டும் ஆக்கிவருவது தகுமா? மேலும் மக்களின் பிரயாண வசதியீனங்கள் எவ்வளவோ இருக்கின்றன. உயிலங்குளம்—அடம்பன்தெருவிலும், மணல்குளம்—தற்போது மாதோட்டமெனப் பெயர்பூண்டிருக்கும் புகையிரதஸ்தானத்திலும் எள்ளத்தனையாவதுதிருத்தம் ஏற்பட்டிருக்கிறதா? இவைகள்தான் எமது நாட்டுத்தொண்டர்கள் ஆற்றிய சீரியபணியாகும். ஆதலால் இனிமேல் மக்கள் தாங்களாவது உய்த்துணர்ந்து நாட்டின்பொருளாதார—விவசாய, சுகாதார, பிரயாணவசதிகளை விருத்தி செய்யத் திரண்டெழவேண்டும். ஒத்துழைக்க முன்வரவேணடும். போலித்தலைவர்கள்சிலரின் சிலுசிலுப்புகளுக்கு அஞ்சாது, சாதிசமயபேதங்களை நோக்காது பந்துக்கட்டாயெழுந்து நாட்டினை நன்குமுன்னேற்றிவைக்க இன்றே எல்லோரும் முன்வருவார்களாக!

காகங்களின் மகாநாடு — மன்னூர்த்தீவுக்கும், மாதோட்டத்திற்கும் மத்தியாகவுள்ளதும், உடைமரங்கள் நிறைந்ததுமான தள்ளாடியிலே அன்றொருநாள் அதிகாலை இப்பகுதிவாழ் சகலகாகங்களினதும் மகாநாடுஒன்று விமரிசையாக நடந்தேறியது. வயது முதிர்ந்து நரைதிரைவாய்ந்த கிழக்காகம்ஒன்று தலைமைதாங்கியது. அது தனதுஆரம்பஉரையிலே: எதிர்பாராதவிதமாக இம்மகாநாடு கூட்டியதன் நோக்கம் இன்னதென்றும், அதற்குப் பெருந்தொகைக்காகங்கள் சமுகமளித்தமை ஒற்றுமையின்பலத்தைக் காட்டுகின்றதென்றும், நாம்இன்றுசெய்யும் திட்டத்திலே, வழமைபோல அழுகிப் பதனழிந்த உணவுகள் இப்போதுநமக்குக் கிட்டாமற்போகச் செய்திருப்பதை ஆட்சேபிப்பதும் ஒன்றுயிருக்கவேண்டுமென்றும் தெளிவாக எடுத்துக்கூறி உட்கார்ந்ததும், யுவதியான ஒருபெண்காகம்எழுந்து பின்வருமாறு பேசியது:

காலங்கண்ட தலைவர் அவர்களே! அன்பார்ந்தசமுகத்தினரே! வணக்கம். இம்மகாநாடு கூடியதன்நோக்கத்தைத் தலைவர் அவர்கள் சுருக்கமாக எடுத்துக் கூறியிருக்கிறுர். இதனைத்தொடர்ந்து இன்னுஞ்சில முக்கியவிஷயங்களைப்பற்றிக் குறிப்பிடவிரும்புகிறேன். அதாவது, நாம தண்ணீர்ப்பஞ்சம் உண்டாகுங்காலங்களிலே நாவற்குளத்திற்கும், தள்ளாடிக்குமிடையிலுள்ள சிறுபள்ளங்களிலுள்ள சொற்ப நீரையாவது, அந்தநீரில்வாழும் மீன்குஞ்சுகளையாவது உண்டு உயிர்பிழைக்கலாமெனப்

(அடுத்த பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது தமிழாசிரியன்

(ம. பார்வதிநாத சிவம்)

செந்நிறத்தான்; நற்குணத்தான்; தந்தை போன்றான்.
சேயென்வே எம்மையெல்லாம் பேணிக் கொள்வான்.
செந்தமிழின் சேயாவான்; செருக்கில்லா தான்;
"செல்வமெனக் கொண்டதுயான் தமிழே" என்பான்.
இன்தமிழைத் தேனொழுகப் பாடிக் கொள்வான்.
இசைவள்ளல் அவன்எனினும் பொருந்து மிங்கே.
செந்தமிழைத் தெளிவுறத்தான் கற்றபோதும்,
செந்தமிழில் புலவனெனப் பெருமை கொள்ளான்.

பிள்ளைகளின் வளர்ச்சியிலே பெருமை கொள்வான்.
பிழைகள்நாம் செய்திடினும பொறுத்துக் கொள்வான்.
பள்ளியினேர் நேரம்தான் போதா தாயின்,
பாடங்கள் வீட்டினிலே சொல்லி வைப்பான்.
"பிள்ளைகளின் வளர்ச்சியிலே இல்லா இன்பம்
பிறிதொன்றில் ஆசிரியர்க் கில்லை" என்பான்.
பள்ளியிலே படிக்கையிலே இல்லா இன்பம்
பாரினிலே இல்லையெனத் தெரிய வைத்தான்.

விகடமாய்ப் பேசிஎமைச் சிரிக்க வைப்பான்.
விளக்கிடுவான் அப்போதும் பாடந் தன்னை.
"பகட்டினிலே பாரிலெது மில்லை" யென்பான்
"படிப்பேதான் பிள்ளைகளின் வாழ்வும்" என்பான்.
அகம்குளிர அன்பாகப் பேசிக் கொள்வான்
அறிவுதரும் கதையனைத்தும் சொல்லி வைப்பான்.
இசைவாழ்வில் யான்அடைய இருந்த தெல்லாம்
இவனுக்கு மாணவனாய் வாய்த்ததே தான்!

## அறிவுச் சுடர்

1. பெற்றோல் யந்திரத்தினால் இயங்கும் மோட்டார்ரதத்தை முதன்முதலாகக் கண்டுபிடித்துச் செய்தவர் யார்?

சீக்பிறைட் மார்க்குஸ் எனும் வியன்னாநகரவாசியே. இவர் இதனை 1875-ம்ஆண்டு செய்தார்.

2. முதல்மோட்டர் சைக்கிளைக் கண்டுபிடித்துச் செய்தவர் யார்?

கொதிலியெம் டெயிம்லர் எனும் ஊட்டர்பேர்க்நகர்வாசியான ஜேர்மனியரே. இவர் இதனை 1885-ஆண்டு வரையில் கண்டுபிடித்துச்செய்தார்.

3. மோட்டர் ரதங்களைத் தொகையாகச்செய்யும் முறையைக் கண்டுபிடித்தவர் யார்?

1900-ம்ஆண்டு ஹென்றி போட் எனும் அமெரிக்கரே.

4. இந்தியபிரதமர் பண்டிதநேரு அவர்களுக்கு இப்போது வயதென்ன?

65 வயது முடிந்து 66 வயது தொடங்கியிருக்கிறது. இவர் சென்ற 14-ந்திகதிஞாயிறுவாரம் தமது65-வது பிறந்த பெருநாளைக் கொண்டாடினார்.

5. இந்தியாவில் குஷ்டரோகர்களாய் எத்தனைபேர் இருக்கின்றார்கள்?

15 லட்சம்பேர் இருக்கின்றார்கள். இவர்களிலே மூன்றுலட்சம் பேரின் குஷ்டரோகம் தொற்றுந்தன்மை உள்ளதாகும்.

— இமயமலையின் மகா உன்னதமான எவறெஸ்ற் சிகரத்தின்உயரம் இதுவரை 29,002 அடியெனப் பூமிசாஸ்திரப் புத்தகங்களில் கூறப்பட்டு வந்திருக்கிறது. தற்போது இச்சிகரத்தின் உயரம் 29,028 அடியென்று இந்தியஅரசாங்க அளவுப்பகுதி அதிபர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். கடந்த நூறுஆண்டுகளாக எவறெஸ்ற்றின் உயரம் 29,002 என்றே உலகம் நம்பிவரலாயிற்று.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதய நாதரின் திருவருளாலும், சதாசகாயமாதாவின் மன்றாட்டினாலும் நான் கேட்டுக்கொண்டவரம் கிடைக்கப் பெற்றேன். அவர்களின் திருநாமங்கள் ஸ்துதிக்கப்படுவதாக!

— ஜே. எஸ்.

## கம்யூனிஸ்தர்களும் சமயமும்

"கோவிலுக்குப் போகிறவர்களின் மனதைப் புண்படுத்த வேண்டாம்; கோவிற்காரியங்களில் தலையிடவேண்டாம்" என்று ருஷிய கம்யூனிஸ்த கட்சிக் காரியதரிசி குறூஷேஎன்பவர் உத்தரவிட்டிருக்கிறாராம்; இதிலிருந்து என்ன தெரிகிறது? ருஷியாவிலே கோவிலுக்குப் போகிறவர்களின் மனதைக் கம்யூனிஸ்தர்கள் புண்படுத்திவருகிறார்கள என்பதும், இந்தவேலை மக்கள்மனதை மாற்றவில்லை என்பதும், ஆகையால், கம்யூனிஸ்தர்கள் இனிமேல் கெடுபிடியைத் தளர்த்திக்காட்டுவதுபோலத் தந்திரஞ்செய்ய வேண்டுமெனக் கம்யூனிஸ்தர்கள் உணர்ந்திருக்கின்றனர் என்பதும் தெரிகிறது; சமயவிஷயத்திலே கம்யூனிஸ்தர்கள் பாசாங்குசெய்யும் இதேசமயத்தில், ருஷிய பத்திரிகைகள் "விஞ்ஞான முறையில் சமயத்தை எதிர்ப்பதை" இன்னும் தீவிரமாக்க வேண்டும்என்று தாளமபோடுகின்றன என்று நியூயோக் 'ரைமஸ்' பத்திரிகையின் தலையங்கம் ஒன்றில் எழுதப்பட்டிருக்கிறது.

— அயர்லாந்துதேச கத்தோலிக்க மக்களால் உதவப்பட்ட திருமண நிச்சயார்த்த மோதிரங்கள், ஆபரணங்கள் கொண்டு சுத்ததங்கத்தினால் செய்து, விலைபெற்ற அநேக இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட அழகான முடி ஒன்று பாத்திமாபதியில் காட்சிபெற்ற சங். லூசியா கன்னியாஸ்திரி இருந்துவருகின்ற போர்த்துக்கால்தேச கொயிம்பிறு நகரிலுள்ள கார்மேல்மடத்துக் கன்னியாஸ்திரீமாரின் பாத்திமா சுரூபத்துக்குச் சூட்டுதற்கென்று அன்பளிப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

— சீனாவிலே 1900-ம் ஆண்டு பொக்ஷாது காலத்தின்போது வேதத்துக்காகத் தங்கள் பிராணனைத் தியாகஞ்செய்த 56 வேதசாட்சிகளுக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் சூட்டும்விஷயமாய்த் திருச்சடங்குகளின் ஆராய்ச்சித் திருச்சங்கம் அவர்களின் மரணத்தைப்பற்றிப் பரிசீலனை செய்துவருகின்றது. இந்த வேதசாட்சிகளில் இரு பிரான்சிய யேசுசபைக் குருமாரும் சீனக்குருமாரும், ஆடவரும், பெண்மணிகளுமான 54 பேரும் அடங்குவார்கள்.

## எங்கள் இல்லவிழா

கொழும்புத்துறை, சஞ் சூசையப்பர் சாதனாபாடசாலை விடுதியைச்சேர்ந்த அர்ச். சவேரியார் இல்லத்தவராகிய நாங்கள் எங்கள் இல்லவிழாவைக் கடந்த 14-11-54 ஞாயிறுவாரம சிறப்பாகக் கொண்டாடினோம. முதல்நாள் சனிவாரம் இரவு 7-30 மணியளவில் எங்கள் தாபனஅதிபர் வண. எல். ஏ. சிங்கராயர் சுவாமியவர்கள் தலைமையில் பலபிரமுகர்களும் சமுகமாயிருக்கத் "தஞ்சம் தீர்த்த தாதை" என்னும் அரியநாடகம் இல்லத்தவரால் திறம்பட நடிக்கப்பட்டது. ஞாயிறன்று காலை இல்லத்தவர் எல்லோரும் இன்பகரமாய் இறைவனாலயஞ்சென்று தங்கள்காவலராம் அர்ச். சவேரியாரைப் போற்றிநின்றனர். தேவகீதங்கள் பலபாடி யாவரும்பரவசமுற அதிபர் சுவாமியவர்கள் திவ்வியபூசைநிறைவேற்றினர். சாயந்தரம் 3-15மணிக்கு எமதுவிடுதியிலுள்ள அர்ச். ஞானப்பிரகாசியார் இல்லத்தோருடன் சிநேகபூர்வமான ஓர்உதைபந்தாட்டப் போட்டி நடத்தினோம். மத்தியஸ்தராக ஆசிரியகலாசாலை மாணவர் செல்வன் ரி. சிமியோன்அவர்கள் கடமையாற்றினர். 4-30 மணிக்கு மகாவந். ஜே. ஏ. கியோமார்ஆண்டவர், தாபன அதிபர் சுவாமியார், மற்றுங்குருமார், பயிற்சிக்கலாசாலைப் பேராசிரியர், பெரியோர், விடுதிமாணவர் சமுகந்தரத் தோட்டோபசாரனை நடந்தேறியது. அதிபர்சுவாமியவர்கள் எங்கள் இல்ல முன்னேற்றத்தைப் பாராட்டி, வருங்காலத்தில் இன்னும் உயரியநிலையை அடைய வேண்டுமெனக்கூறி ஆசீர்வதித்தார். அர்ச். சவேரியார் இல்லம் வாழ்க!

ஈ. ஆர். யோசேப்பு,
காரியதரிசி.

## நான்தான் குற்றவாளி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பதில் திறமைசாலியாய் இருந்தபடியால், குருமார்சபைஒன்றைப் புதிதாய் ஏற்படுத்தும்படி பரிசுத்தபிதா அவரைக் கேட்டுக்கொண்டார். கஸ்பார் டெல் பவலோசுவாமியார் இரட்சகரின் திருஇரத்தத்தில் அதிகம்பக்தியுடையவராகையால் தாம் அடியிட்ட சபைக்கு அப்பெயரையேயிட்டார்.

விரைவில் திருஇரத்த சபை இத்தாலியிலும், வேறிடங்களிலும் பரவியது.

டெல் பவலோசுவாமியார் ரோமாபுரியில் 1837-ம் ஆண்டு மார்கழிமாதம் 28-ந்திகதிபரமபதமடைந்தார். ரோமையில்பரவிய கொள்ளைநோயில் நோயாளரைப் பராமரித்தபோது அவரும் அந்நோய்க்கு இரையாகினார். சனங்கள் அவருக்கு "ரோமையின் அப்போஸ்தலர்" என்று பெயரிட்டார்கள். அவரைச் சுத்தவாளனாக மதித்தார்கள். அவர்களுடையமதிப்புச் சரியாயிற்று ஏனெனில், நிகழும் 1954-ம் ஆண்டு ஆனிமாதம் 12-ந்திகதி நமதுபரிசுத்தபிதா டெல்பவலோசுவாமியாரை அர்ச்சியசிட்ட கஸ்பார் டெல் பவலோ என்று நாமஞ்சூட்டினார்.

— சுவெஸ்கால்வாயை இன்னும் அதிக ஆழமும், அகலமுமுடையதாய் வெட்டவேண்டுமென்ற திட்டத்தைச் சுவெஸ்கம்பெனியார் சென்ற 19-ந்திகதியன்று பரீஸ்நகரில்கூடி ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இந்தத்திட்டம் ஐந்து அல்லது ஆறுவருடத்தில் நிறைவேற்றிவைக்கப்பட விருக்கிறது. அப்போது அக்கால்வாய்த் தண்ணீரிலே 36 அடி ஆழத்தில் செல்லக்கூடிய பெரியகப்பல்கள் அதன் வழியாகச் செல்லும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 10356

அராலி, தெற்குக்குடி
திருச்சிற்றம்பலம் இராசசுந்தரம்
— வழக்காளி.

யாழ்ப்பாணம்
மாட்டீன் றோட்டிலிருக்கும்
(1) பிலிப்பு தேவசகாயம் சவிரிமுத்துவும், பெண்
(2) மேரி ஆன் சவிரிமுத்துவும்.
(3) 4-ம் குறுக்குத்தெரு, 25/1-ம் நம்பர் யோண் செபஸ்தியான்.
— எதிராளிகள்

யாழ்ப்பாணம், டிஸ்திறிக் கோட்டின் 10356-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1955-ம் வருஷம் தைமாதம் 4-ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

### காணிவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக், யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளிக் கோயிற்பற்று, கரையூரிலுற சீமான் தேவிர தோட்டம். பர. நி. இலா. 2. குளி $1\frac{1}{4}$. வீடும், கிணறும், மற்றும் அதைச் சேர்ந்தவைகளும்.

எல்லை, வடக்கு: A. J. தம்பிஐயாவினுதனம். கிழக்கு: ஶ்ரீமான் கத்தோலிக்கமிஷனுக்குடையஆதனம். மேற்கு: C. F. மாட்டீனுக்கும், மறு பேருக்குமுடைய ஆதனமும், ஒழுங்கையும். தெற்கு: A. P. எதிர்மன்னசிங்கிபெண் குளோறியாவுக்கும், பங்காளருக்கும், கரையூரிலிருக்கும் சென்யேம்ஸ் சோவிலுக்குமுடையஆதனம். இதடங்கலும்.

S. Ratnasabapathy,
*Commissioner of Sales.*

42, Colombogam Road,
Jaffna. 24-11-54

## மாதோட்டத்தபால்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்தால் அதற்கும் இப்போது வழியில்லை. உள்ளநீரையெல்லாம் பால் வியாபாரிகள் சிலர் அள்ளிப்போய்ப் பாலுடன்கலந்து விற்றுப் பணமாக்க எத்தனிக்கிறார்கள். அதனால், நீர்வற்றிப்போக ஆங்குள்ள மீன் குஞ்சுகளைப் பருந்துகள்பட்சித்துப் பசிதீர்த்துக் கொள்ளுகின்றன. அதனால் நாங்கள் உண்ணஉணவும், பருகநீரு மில்லாது தவிக்கநேர்கின்றது. அடுத்தபடியாக, வயதுமுதிர்ந்து நோய்கண்ட மாடுகளாவது இறந்துபோக அவற்றையாவது உண்ணலாமென்றால், அந்தோ! அந்தமாடுகளையும் ஏதோவிதமாய் விற்றுப் பணமாக்கப்பார்க்கிறார்கள். அம்மட்டா! மாக்கறிச்சந்தை, மீன்சந்தைகளிலே அழுகிப் பதனிழந்தவற்றையும், நாறிப் பதங்கெட்டுப் போனவற்றையுமாவது வெளியிலே குப்பைத்தொட்டிகளில்வீசினால், அவற்றையாவது பட்சித்துப் பசிதீரலாமென்றாலும் அவற்றையும் இப்போது கணைப்படைத்துங் காணமுடியாதிருக்கிறது. ஏனெனில், அவைகளையும் பணமாக்க முற்படுகின்றார்கள். (காகோஷமும், "கா, கா" என்னுங் கானங்களும்) இவற்றிற்கெல்லாம்காரணம் எவரின்பராகண்டிதமோ தெரியவில்லையே. அதனால் நமக்கு விரைவிலே உணவுநெருக்கடி உண்டாவது நிச்சயம். மக்களுக்கும் பலவிதநோய்கள் உண்டாவதும்நிச்சயம். அதனால் தகுந்தநடபடி எடுக்கத் தவறுமிடத்து எங்கள்பாடு திண்டாட்டமாகவே முடியுமென்றுசொல்லிக் கா, காஎன்று கரையத்தொடங்கியது. பின்னர் அதிகநேரம் சென்றதால் மகாநாடு பின்போடப்பட்டது.

சுபம்!

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, November 25-1954.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org